கவிமணி மன்றம்

குருவிக்கொண்டான்பட்டி

பதினான்காம் ஆண்டு மலர்

(1972)

With Compliments

Phone: 22691 (3 lines)

Cable: "TANDRIGHT", Madras.

Telex: 230 & 242

The

India Leather Corporation

Private Ltd.,

"India Leather Mansions"

9, Davidson Street,

G. P. O. Box 1516, Madras-1.

கவிமணி நாமம் வாழ்க



கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

பிறப்பு
1876, ஆடி, 14

மறைவு
1954, செப்டம்பர். 26

"தேனெழுகக் கவிபாடும்
தேசிக விநாயகமே!

நானுனது கவிபாடி
நாடோறு மகிழுவனே"

—(அழ. வள்ளியப்பா)

முதலமைச்சர்

சென்னை-9,

16-3-72

குழந்தைகளுக்காக அழகொழுகும் எளிய-இனிய பொருளுள்ள கவிதைகளை எழுதிக்குவித்துச் சிறுவர் இலக்கிய உலகில் நிலையான இடம் பெற்ற முதல் குழந்தைக் கவிஞர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். அத்தகு கவிமணியின் பெயரில் குருவிக் கொண்டான்பட்டியில் தொடங்கப்பெற்றுள்ள மன்றத்தின் பதினொலாவதாண்டு நிறைவு விழா சிறப்புற நடை பெறவும், விழா மலர் கவிமணியின் மணம்பரப்பும் கவின் மலராக வெளிவரவும் மனமார விரும்பி வாழ்த்துகிறேன்.

மு. கருணாநிதி

திரு. பெரி. சொ. பெரியண்ணன்,
தலைவர், 'கவிமணி' மலர்க்குழு,
9, டேவிட்சன் தெரு,
சென்னை-1.

க. அன்பழகன்,
மக்கள் நல்வாழ்வுத்துறை
அமைச்சர்.

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9,
3—4—72.

திரு. பெரி. சொ. பெரியண்ணன்
9, டேவிட்சன் தெரு,
சென்னை-1.

அன்புடையீர்,

வணக்கம். தாங்கள் அனுப்பிவைத்த வேண்டுகோள் கடிதம் கிடைத்தது. நன்றி. கவிமணி மன்றத்தின் ஆண்டுவிழா இனிது நிறைவேறவும் சிறந்த பயன் தரவும் விரும்பி வாழ்த்துகிறேன்.

அன்பன்,
க. அன்பழகன்

கே. ஏ. மதியழகன்,
பேரவைத் தலைவர்.
தமிழ்நாடு சட்டப் பேரவை.

தலைமைச் செயலகம்,
சென்னை-9.
3—4—72

திரு. பெரி. சொ. பெரியண்ணன்,
எண். 9, டேவிட்சன் தெரு,
சென்னை-1.

அன்புடையீர்,

தங்கள் கடிதம் கிடைத்தது.

கவிமணி மன்றம் ஆண்டுவிழா சிறந்த முறையில் நடைபெறவிருப்பதை அறிய மகிழ்ச்சியடைகிறேன். விழா சீரும் சிறப்புமாக நடைபெறவும், விழாவையொட்டி வெளியிடவிருக்கும் மலர் பயனுள்ள வகையில் அமைய என் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
கே. ஏ. மதியழகன்



திருவாளர் பெரி. சொ. பெரியணன் செட்டியாரவர்கள்,

தலைவர்,

மலர்க்குழு,

கவிமணி மன்றம்,

குருவிக்கொண்டான்பட்டி,

திருச்சி மாவட்டம்.

அன்புள்ள ஐயா,

தங்கள் மன்றத்தின் ஆண்டுவிழா அண்மையில் நடக்க விருப்பதும் அதுபோது சிறப்பு மலர் ஒன்று வெளிவரவிருப்ப தும் தெரிந்து மகிழ்ச்சியடைகின்றேன். கவிமணி அவர்கள் நம் நாட்டில் தமிழ் இயல், இசை, நாடகம் இவைகளை பரப்பு வதில் மிக்க ஆர்வங்கொண்டு தம் வாழ்நாளையே அர்ப் பணித்துக்கொண்ட அன்னாரின் பேரால் தங்கள் மன்றம் நிறுவப்பட்டு அவர்கள் செய்து வந்த பெருந்தொண்டை மக்களுக்கும் நாட்டிற்கும் எடுத்துக்காட்டி வருகிறது என்பதில் ஐயமில்லை. இந்த உயர் நோக்குடன் மன்றத்தின் ஆண்டு விழாவின் போது சிறப்பு மலர் ஒன்று வெளிவருவதும் மிகவும் பொருத்தமே. தங்கள் முயற்சி வெல்க. தங்கள் மன்றத்தின் ஆண்டு விழா மிக்க சிறப்புடன் விளங்கவும் பிரார்த்திக் கின்றேன்.

தங்கள் அன்புள்ள

9-3-72

மு. அ. முத்தையா செட்டியார்

A. NAGAPPA CHETTIAR
Managing Director
The India Leather Corporation Private Ltd.
Madras-1

13–3–1972

வாழ்த்து

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" எனும் குறள்நெறிக்கிணங்க அன்புகலந்து, அறிவு கலந்து, தமிழ் கலந்து சைவ நெறிச் சார்போடு எளிமையுடன் இனிமை நிறைந்து வாழ்ந்த "கவிமணிக்கு" மன்றம் அமைத்து; விழா நடத்தி சிறப்புமலர் வெளியிடும் செய்தி அறிந்து அகம் மகிழ்ந்தேன்.

தேன்போன்ற இனிமையும், பால் போன்ற பொருள் நிறைவும், பூ போன்ற தமிழ் மணமும் நிரம்பப் பெற்று கவிமணியின் புகழ் நிறைவோடு மலர் தோன்றி மன்றம் செயற்கரிய புதுமைகள் பலவாற்றி மிகப்பெற ஆலவாய் அண்ணலின் திருவருளை வேண்டுகிறோம்.

அன்புள்ள

ஆ. நாகப்பன்

திரு. வெ.ச. திருப்பதி,
செயலர்,
கவிமணி மன்றம்,
குருவிக்கொண்டான்பட்டி.

M. A. M. RAMASWAMY, B. A.

Sheriff of Madras.

14-3-72

கவிமணி மன்றம்,

குருவிக்கொண்டான்பட்டி,

திருச்சி மாவட்டம்.

தங்கள் மன்றத்தின் சார்பில் நடைபெறும் ஆண்டு விழாவினை ஒட்டி சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன்.

தேனினும் இனிய கவிதை பல இயற்றிய கவிமணி அவர்கள் தமிழ் மொழியை மேலும் சிறக்கச் செய்ததுபோல் அவர் பெயரால் அமைந்துள்ள தங்கள் மன்றமும் அவர் வழி நடந்து மொழிக்கும், நாட்டுக்கும் நற்பணிகள் பல புரிந்து மலரின் மணம்போல் தங்கள் மன்றமும் மணம்பெற என் அன்புகலந்த நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. அ. மு. இராமசாமி

அன்பு நெஞ்சமும் தமிழ் நிறைவும் இனிய சொல்லும், சைவ நெறிச் சார்பும் பெற்று தெய்வமகனாய் எளிய வாழ்வு வாழ்ந்து, முன்னோர்போல் நாமும் நம் வழித் தோன்றல்களும் வாழ எண்ணி மண்ணியல், சிறுதேர், சுக்கிரநீதி, உதயன சரிதம், திருவெம்பாவை போன்ற நீதி நூல்களை விளக்கப் பேருரையோடு நமக்களித்து, ஆதியும், அந்தமும்இல்லா அரும் பெரும் சோதியை ஆட்கொண்ட நம் கவிமணிக்கு மன்றம் அமைத்து, விழா நடத்தி மலர் வெளியிட விழைந்த உங்கள் மேம்பட்ட நற்செயல் எண்ணி நெஞ்சம் நிறைந்த என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழாவும் சிறப்புற நடந்து, சிறப்பு மலரும் பெருமை தர அமைந்து, நன்மைதர எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டு கிறேன், வளர்க "கவிமணி மன்றம்"! வாழ்க அவன் புகழ்!

அன்புள்ள

மு. நா. முத்துக்கருப்பன்
தாளாளர்
மு. நாராயணன் செட்டியார் உயர்நிலைப் பள்ளி,
கொப்பனாபட்டி.

திரு. பெரி. சொ. பெரியண்ணன்,
மலர்க் குழு தலைவர்,
"கவிமணி மன்றம்"
குருவிக்கொண்டான்பட்டி.

D. Srinivasan
Secretary
Southern India Chamber of Commerce
& Industry
"Indian Chamber Buildings" Madras-1

9th March 1972

Dear Shri Periannan,

I am glad that Kavimani Mandram have programmed to celebrate their annual meeting in 9th March 1972 and that they are bringing out a souvenir. I wish the Mandram all success in its endeavours.

Yours sincerely,
D. Srinivasan
Secretary

DS : ED.

Shri Pr. S. Periayanan,
Asst. Secretary,
The India Leather Corporation Pvt. Ltd.,
9, Davidson Street, Madras-1.



The Southern India
Chamber of Commerce
&
Industry
INDIAN CHAMBER BUILDINGS
Post Box No. 1208

Grams : INDCHAMBER
Phone : 22229 & 22877
22055 (SECY)
Madras-1.

4th April 1972

J. PRASAD DAVIDS, M.A. (Econ.)
Asst. Secretary

I consider it a rare privilege to give this message in the Souvenir which is brought out to celebrate the 14th Anniversary of Kavimani Mandram at Kurivikondanpatti. As poets are born and not made, I am very glad that this Souvenir is dedicated to the memory of the great poet Kavimani Desiga Vinayagam Pillai whose contribution to Tamil poetry is indeed very significant. I have great pleasure in wishing this function all success.

J. PRASAD DAVIDS

AL. SRINIVASAN

Grams :
NECTAR

Phone :
84474 & 83344

Post Box No. 669

"Sarada"
14, Ratna Chetty Street
Royapettah, Madras-14.
Date : April 4, 1972.

The President,
Kavimani Mandram,
Kurivikondanpatti.

Sir,

Please accept my sincere felicitations to you all who had been doing an excellent service through religious disclosures on Tamil litrature all these years.

I wish the function in connection with the 14th Anniversary of your Mandram all success.

Yours faithfully,
AL. SRINIVASAN.



Mohamed Adam Sait, J.P.
Former President
Southern India Chamber of
Commerce & Industry

TELEPHONE: 86882
"Sait House"
14, Marshalls Road
Madras-8

4th April 1972.

Dear Mr. Periyanan,

I am very glad to learn from your letter that you are celebrating the 14th Anniversary of The Kavimani Manram in a grand manner, and I wish to send my greetings and good wishes for the future growth and prosperity of the Manram.

With kind regards,

Yours sincerely,
MOHAMED ADAM SAIT.

PR. S. Periyanan, Esq.,
P. O. Box No. 1516,
Madras-1.

P. SABANAYAGAM, I.A.S
Chief Secretary
Government of Tamilnadu

13-3-72



கவிமணியின் கவிதைகள் எளியவை. அவை, பெரியவர்கள் படித்து இன்புறுவதற்கு எழுதப் படாமல், சிறுவர் சிறுமியர் படித்துப் பயனடைவ தற்காக எழுதப்பட்டவை என்று கூடச் சொல்லலாம். இளம் உள்ளங்களில் பல நற்பண்புகளை உருவாக்கும் வகையில் அமைந்துள்ள அவரது கவிதைகள் மிகச் சிறந்த குழந்தை இலக்கியமாகும்.

கவிமணி மன்றத்தின் ஆண்டுவிழாவும், சிறப்பு மலரும் நன்கு அமைந்திட எனது நல்வாழ்த்துக்கள்.

பி. சபாநாயகம்



க. அறிவழகன் M. L. C.

சென்னை-84
15—3—72.

கவிமணி மன்றம் வைத்து
கனித்தமிழ் நெஞ்சம் காத்து

செவியெலாம் இன்பம் சேர்த்து
செய்திடும் தொண்டு தன்னை

புவியெலாம் வாழ்த்தும் வாழ்த்தில்
பொலியுடன் வளர்க! வாழ்க!

அயலவர் நெஞ்சும் வாழ்த்த
ஆண்டுநிரை பெற்று வாழ்க!

நன்றி
க. அறிவழகன்.

G. Sundaram
INDIAN ADMINISTRATIVE SERVICE
SECRETARY,
LEATHER EXPORT PROMOTION COUNCIL

3/38, VEPERY HIGH ROAD,
MADRAS-3

April 6, 1972.

MESSAGE

I am glad to know about the 14th Anniversary function of Kavimani Mandram at Kuruvikondanpatti. I wish the function and the Mandram success in their endeavours.

G. SUNDARAM.

Kavimani Mandram,
Kuruvikondanpatti.

நவில்தொறும் நயங்கள் தேறும்
நாவினில் நடனம் ஆடும்
புவிமகள் புகழ் கொண்டாடும்
புன்னகைக் குழந்தை பாடும்
கவியெனப் பிறந்த வெள்ளம்
கலைமகள் வரம்போல் ஊறும்
கவிமணி தமிழன் சொத்து
கனித்தமிழ்க் கடலின் முத்து!

-கண்ணதாசன்

K. V. JAGANNATHAN, M.A.

' Kaanthamalai '.
7, Norton I Street,
Madras-28

உள்ளத் துணர்ச்சி பொங்கிவர
உரையில் சிறைசெய் தின்கவியாய்
வெள்ளச் சுவைகள் சேர்ந்துவர
விளம்பும் கவிஞன் பலர் போற்றும்
வள்ளல் நாஞ்சில் நாடுதந்த
தேசி கவிநா யகன்கீர்த்தி
விள்ள நினைக்கச் செய்கின்ற
விமலர் வாழி வாழியவே

குருவிக் கொண்டான் பட்டியினில்
கொழிக்கும் சுவைசார் கவிநயத்தை
மருவி நுகரும் அன்பர்கவி
மணியின் பேரால் ஒருமன்றம்
திருவுற் றெளிர நிறுவியங்கே
செய்ய தமிழ்த்தாய் நடனமிட
அரிய பணிகள் செய்கின்றார் ;
அந்த மன்றம் வாழியவே !

கி. வா. ஜகந்நாதன்

புகழ் போல் வாழ்க!

காலமழை உயிர் வழங்கும்
 கடமை மழை நமை உயர்த்தும்
கவிதை மழை சுவைசேர்க்கும்
 கன்னி மழை சுகம்காக்கும்
அன்புமழை பண்புமழை
 ஆனமழை எல்லாமும்
வாழவைக்கும் தெய்வங்கள்
 வற்றாத பெருந்துணைகள்.

பிறர்வாழ வாழுவதே
 பேரின்ப வாழ்வென்று
இயற்கைப் பொருள்களெல்லாம்
 இசைபாடி நின்றிருக்க
அடுத்தவரை மிகவதைத்து
 அடுக்கடுக்காய் பொருள்சேர்த்து
கண்ணிருந்தும் குருடர்களாய்ச்சிலர்
 காலமெல்லாம் வாழ்வதென்ன?

பிறந்தார் இறப்பரென்ற
 பேருண்மை தனையறிந்தும்
நிலையாமைக் கொடியின்கீழ்
 நீண்டபொருள் தேடுவதேன்?
பலர் வாழ வாழுவதே
 பகுத்தறிவார் செயலாகும்
ஊர்போற்ற வாழ்பவரே
 உண்மையாய் வாழ்பவராம்.

எல்லாரும் வாழ்ந்திடவே
 இயன்றதைச் செய்ததனால்
கவிமணியார் திருமன்றம்
 கலைமன்றம் ஆனதம்மா
பதினான்கு ஆண்டுகளைப்
 பார்த்து மகிழுதம்மா
புகழ்போல அதுவாழப்
 புலவன்நான் வாழ்த்துகிறேன்.

- புலவர் நாக சண்முகம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் 28-3-72

குன்றக்குடி.

அன்பிற் சிறந்த நமது கவிமணி மன்றத்தவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக அண்ணுமலே அண்ணலின் திருவருளேச் சிந்தித்து வாழ்த்துகிருேம்.

கவிமணி பாரதி காலத்தில் வாழ்ந்த ஒரு சிறந்த பைந்தமிழ்க் கவிஞர். பாரதி புயலென வீசினுன். கவிமணி தென்றலெனத் தவழ்ந்தான். பாரதி சமுதாயச் சீர்கேடுகளேக் கண்டு கனல் கக்கினுன். கவிமணி மெல்ல ஊதி அதையெரியச் செய்தவர். கவிமணி கவிதைகள் ஆற்றெழுக்கானவை. அமைதியானவை. ஆயினும் சிந்தனேக்குச் சிறந்த விருந்தாக அமைபவை. சமுதாயப் பிழைகளே பாரதியும் கண்டித்தான். அவனுடைய கண்டனத்தில் கனல் வீசிற்று, கவிமணியும் கண்டிக்கிருர். இவருடைய கண்டனத்திலே கேலியும் வியப்பும் மிளிருகிறது.

சாதாரணமாக உலகியலில் பிழை செய்யாத மனிதர்கள் இல்லே. பிழை செய்து விடுதலே ஒரு கொடுமையான பாவமல்ல. பிழையைப் பிழையென்று உணர மறுப்பதுவும், பிழைகளேத் தவிர்த்து வளர முயற்சிக்காமல் இருப்பதுமே பாவமாகும். இதுதான் உலகியலின் நியதி! ஆனுல் இன்ருே 'பெரிய மனிதர்கள்' மிகப் பெரிய பிழையைச் செய்கிருர்கள். ஆனுல் சமுதாயம் அதைச் சிறு பிழை என்று தேய்த்து மறைத்து விடுகின்றது. சின்ன மனிதர்கள் மிகச் சிறிய பிழை செய்கிருர்கள். ஆனுல் சமுதாயம் இதை மலேயாக்கித் தூற்றுகிறது, இந்த சமுதாயத்தில் எவ்வளவு வஞ்சனே இருக்கிறது என்று கவிமணி அங்கலாய்த்துக் கொள்கிருர்'' என்றிவ்வாறு உரைப்பவரைக் காணல் அரிது—அம்மா!,' என்று வியக்கின்ருர்.

பெரியோர் செய்த பெரும்பிழை யதனேச்
சிறு பிழை யென்று தேய்த்து விடுவர்;
சிறியோர் செய்தது சிறுபிழை எனினும்
பெரும்பிழை யென்று பேரிகை கொட்டுவர்
உள்ளதை உள்ளவா றுரைப்பவர்
அரியர் அம்மா அவனிமீதே

என்பது கவிமணி வாக்கு.

கவிமணி பழந்தமிழ் இலக்கியத்தில் நிறைந்த ஈடுபாடுடையவர். ஆர்வத்தோடு கற்று அனுபவித்தவர். தமிழை தமிழ் இலக்கிய உலகைக் கவிமணி ஒரு சுனை எனக் காண்கிருர். சுனையின் நீர் தண்மையுடையது, பருகுதற்கினியது. புற-அக வெப்பம் தணிக்கவல்லது. மாசுபடாதது; மாரு ஊற்று வளத்தது. அத்தகைய சுனையைப் போன்றது. தமிழ் இலக்கிய உலகம் வேறு வேறு புத்தகக் காட்டில் புகுந்து களைப்படைய வேண்டாம். தமிழ் இலக்கிய உலகத்தின் தண்ணிழலில் தங்கி இன்னமுதம் உண்ணலாம் என்று கவிமணி அழைக்கிருர்.

புத்தகக் காட்டில் புகுந்து களைப்புற்றது
இத்தனையும் போதுமினி என்னெஞ்சே—நித்தமும்
தண்ணிழல் தங்கித் தமிழ்சுனையில்—இன்னமுதம்
உண்ணலாம் வாநீ உவந்து

என்பது கவிமணியின் பாடல்,

கவிமணியின் பெயரால் மன்றம் அமைத்து கவிமணி அன்று விடுத்த அழைப்பை இன்று சமுதாயத்திற்கு நினைவூட்டிக் கொண்டிருக்கும் கவிமணி மன்றம் வாழ்க! வளர்க அதன் பணி!

என்றும் வேண்டும் இன்ப அன்பு

தெய்வசிகாமணி

(குன்றக்குடி அடிகளார்)

பெறுநர்:—
திருமிகு, பெரி. சொ. பெரியண்ணன்
9, டேவிட்சன் தெரு,
சென்னை-1.

A. NACHIAPPAN **RANGIEM**

CHAIRMAN

Tirumayam Panchayat Union 13-3-72

இந்த நூற்றாண்டின் ஏற்றமிகு கவிஞர்களில் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள் முடிமணியாய் விளங்கியவர். அவருடைய கவிதைகள் எளிமையும், இன்பமும், அருமையும், பெருமையும் நிறைந்தவை. இத்தகு கவிஞர் பெருமானின் திருப்பெயரால் மன்றம் கண்ட, குருவிக்கொண்டான்பட்டி இளைஞர்களின் செயல் பாராட்டுக்குரியது. ஆண்டு தோறும் அறிஞர்களை வரவழைத்து சிந்தனைக்கும் விருந்தளிக்கும் கவிமணி மன்றத்தார் இந்த ஆண்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடுதல் சீரிய செயலாகும்.

கன்னித்தமிழ் வளர்க்கும் கவிமணி மன்றம் நீண்ட காலம் நிலைத்து நின்று செந்தமிழ்ப் பணிபுரிய உளங்கனிந்த என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

A. நாச்சியப்பன்

V. N. CHIDAMBARAM

Kamala Theatre
172/1, Arcot Road, Vadapalani,
Madras-26.

15—3—1972

பேரன்புடையீர்,

செந்தமிழ் தேனீ, கற்பனை ஊற்று கவிமணி, தேசிக விநாயகம் பிள்ளையின் பெயரால் நடைபெறும் இந்த மன்றத்தின் ஆண்டுவிழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலர் சீரோடும் சிறப்போடும் வெளிவர என் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

வாழ்க தமிழ் வளர்க கவிமணியின் புகழ்.

தங்களன்புள்ள

வ. நா. சிதம்பரம்

Sree Sevugan - Annamali College

Prof. N. BALUSAMY, M.A., M. LITT.,
Principal.

Devakottai
8—3—72

கவிமணி மன்றத்தின் சார்பில் இவ்வாண்டு நடைபெறும் விழாவில் வழக்காடு மன்றம் ஏற்பாடு செய்யப்பெற்றிருப்பது பெரிதும் பயன்தரத்தக்கது. இலக்கியத்தைப் பரப்புவதற்கு மிகவும் வலுவான சாதனம் இது. தங்கள் மன்றம் ஆற்றிவரும் இலக்கியத் தொண்டு பாராட்டுதற்கு உரியது.

வளர்க தொண்டு ; வாழ்க மன்றம்.

அன்பன்

நா. பாலுசாமி

13-ம் ஆண்டு விழாவில் கலந்துகொண்டவர்கள்





13-ம் ஆண்டு விழாவில் கலந்துகொண்டவர்கள்





கவிமணி மன்றம் வாழ்க!

புலவர் முத்துவேங்கடேசன்

நகரத்தார் தமிழைப் பேணும்
நல்லோராய் விளங்கு கின்றார் !
நகரத்தார் மரபு பேணும்
நறுங்கவி மன்றம் வாழ்க !

தேன்மழைக் கவிதை மேகம்
தேசிக விநாய கத்தின்
வான்புகழ் பரப்பு கின்ற
வளமான மன்றம் வாழ்க !

அமுதூறும் நிலவை இன்பம்
அளித்திடும் தென்றல் தன்னைச்
சமுதாயக் கவிதை யாக்கித்
தந்திட்டார் மன்றம் வாழ்க !

சந்தனச் செஞ்சொல் லாலே
சிந்தனை அமுதம் நல்கிச்
செந்தமிழ் காத்த நல்லோர்
திருப்பெயர் மன்றம் வாழ்க !

குழந்தைக்கும் கவிதை பாடி
குளிர்வித்த கவிஞர் போற்றி
அழகான தமிழ் வளர்க்கும்
அருங்கவி மன்றம் வாழ்க !

கவிமணி மன்றம் வாழ்க !
கவிமணி மன்றம் பேணும்
கவிமனச் செம்மல் வாழ்க
கவிதைகள் என்றும் வாழ்க !

With compliments of:

DHARMSEE PARPIA

"Parpia House"
100, Poonamallee High Road,
MADRAS-10.

"Amjad Manzil"
63, 64, Sembudoss Street,
MADRAS-1.
Tel: 23848 (3 lines)

மன்றத்தினைப்பற்றி .....

புவிமணியாய் போற்றும் புனிதப் புகழார்
கவிமணி மன்றம் கனிவாய்--நவிலும்
இனிய தமிழ் வளர்த்து எந்நாளும் வாழ்க
பனிமதி போல் தண்மை படைத்து.

—திருமுருக கிருபானந்த வாரியார்.

திருமிக்க நாமகளும் பூமகளுஞ் சேர்ந்த
குருவிக்கொண் டானெனும் பொற்கோவூர்--மருவும்
கவிமணிநன் மன்றம் கலைபெருகி வாழ்க!
புவிமணக்கும் தொண்டு புரிந்து.

—வேகுப்பட்டிக்கவிஞர் பெரி. இலக்குமணனூர்.

குலமொன்றே எனக்கருதும் குருவிக்கொண்டான்பட்டிக்கு
தலமுயரத் தமிழ்வளர்க்கும் இளையோரின்-நலமலிசேர்
கவிமணி மன்றம் வாழ்க கன்னித் தமிழ் வாழ்க
புவி வாழ்க என்றும் பொலிந்து.

—வித்வான் விசு. திருநாவுக்கரசு

கற்றபடி நின்ற கவிமணியை எந்நாளும்
உற்றபடி எண்ண ஒருமன்றம்--நற்றமிழர்
கண்டார் இந்நகரில் கன்னித் தமிழ்தழைக்கத்
தொண்டாற்றும் என்றே துணிந்து.

—புலவர்மணி முரு. பழ. இரத்தினம் செட்டியார்.

சென்னையில்

நவீன வசதிகளுடன்

புதியதோர் திரை அரங்கம்

கமலா



கோடம்பாக்கம் சென்னை-26.

போன்: நெ. **445410.**

பதினன்கு ஆண்டுகள்

மு. பழநியப்பன்.

நகரத்தார் தொன்று தொட்டு ஆற்றிவரும் தமிழ்ப் பணியை எங்களது ஊரிலும் பரவலாக்க வேண்டும் என்ற எங்களின் எழுச்சியால் தோன்றிய இம்மன்றத்தின் வரலாற்றை நினைத்துப் பார்க்கின்றேன். நெஞ்சமெல்லாம் இனிக்கிறது இன்றைய அரும்பு நாளைய மலர். இன்றைய சிறுவனே நாளை நம் நாட்டின் தலைவன். நல்ல குழந்தைகளே நாட்டின் செல்வங்கள் அச் சிறுவர்களுக்கு இளம் பருவத்தில் உயர்ந்த எண்ணங்களை ஊட்டவேண்டும் என எண்ணி, இளம் குழந்தைகளுக்காகவே கவிதை இயற்றிய முதல் கவிஞர் கவிமணியவர்கள். அவர்தம் தொண்டினை போற்றும் வகையில் அன்றைய பள்ளி மாணவர்களாயிருந்த பலர் ஒன்று சேர்ந்து 15-8-58-ல் கவிமணி படிப்பகம் என்ற பெயரில் ஒருபடிப்பகத்தைத் தோற்றுவித்தனர். தங்கள் பள்ளி நூல்களோடு பொது நூல்களையும், ஏடுகளையும் படித்தனர் இதன் வாயிலாக.

ஓராண்டைக்கடந்த அப்படிப்பகம், தன் முதலாம் ஆண்டு விழாவை 15-8-59-ல் இலங்கையில் வீரகேசரி என்ற நாளிதழைத் தோற்றுவித்த ஆவினிப்பட்டி பெ. பெரி. சுப. சுப்ரமணியன் செட்டியார் அவர்கள் தலைமை ஏற்க கவிஞர் முடியரசன் அவர்களும், காப்டன் எஸ். குழந்தைநாதன் அவர்களும், முரு. சேதுராமன் அவர்களும் உரையாற்ற சீருடன் கொண்டாடிற்று.

வளர்ந்து வந்த படிப்பகம் தன் இரண்டாம் ஆண்டு விழாவை 8-10-60-ல் ஆவினிப்பட்டி முரு. சேதுராமன் செட்டியார் தலைமையேற்க திருவாளர்கள் அரங்ககலிய மூர்த்தி, க. தில்லைக்கோவிந்தன், சு. பாலசுப்பிரமணியன், கி. கோதண்டபாணி M.A., B. O. L. முதலியோர் பங்கேற்க பாங்குடன் நடத்திற்று.

1961முதல் 67 வரையில் படிப்பகத்து உறுப்பினர்களின் உயர் கல்வி காரணமாக அமைதியான முறையில் தன் பணியைத் தொடர்ந்து ஆற்றி வந்தது இப் படிப்பகம்.

பத்தாம் ஆண்டில் படிப்பகம் மன்றமாக மாறிற்று. மாறிய அவ்வேளையில் முப்பத்தைந்து உறுப்பினரோடு, ஊராரின் துணையோடு 15-4-68—ல் தனது பத்தாம் ஆண்டு விழாவினை புலவர் மணி இரத்தினம் செட்டியார் தலைமையில் துவக்கிற்று. அருள் மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் அருள் மழை பொழிந்து ஆசிகள் தந்தனர். புலவர் ஞானவல்லவன் அவர்களும் புலவர் முத்து வேங்கடேசன் அவர்களும் கவிமணி பற்றி கூறினர்கள் இப்பத்தாண்டுகளில் சொ. தேனப்பன் அவர்கள் செயலராக இருந்தார்கள்.

மு. சுப. கருப்பையாவை செயலராகக் கொண்ட பதினொன்றும்

THE ENFIELD INDIA LTD.

MADRAS-19

Manufacturers of

Bullet and Crusader Motorcycles Villiers agro industrial engines

ஆண்டின் விழா 14-4-69-ல் வித்வான். விசு. திருநாவுக்கரசு அவர்கள் தலைமை ஏற்க, செல்வன் வள்ளியப்பனும் சொல்வேந்தன் சத்தியசீலன் அவர்களும் உரையாற்ற திருஅருட்போதகர் நா. கிரிதாரி பிரசாத் B. A. B. L. அவர்கள் அருட்பாபற்றி அமுத மழை பொழிந்தனர். இவ்வாண்டின் உறுப்பினர்கள் நாற்பத்தொன்பதாக உயர்ந்தனர்.

பணியாற்றிய பனிரெண்டாம் ஆண்டில் மு. பழநியப்பன் செயலராக, இம்மன்றப் பணியை விரிவாக்கி மாணவர்கட்கு கவிமணி அவர்களைக் குறித்து சொற் பொழிவுப் போட்டியும் கவிமணியின் பாடல்கள் ஒப்புவித்தல் போட்டியும் ஆண்டுதோறும் நடத்த வகை செய்தது. அறுபத்துஐவரை உறுப்பினராகக் கொண்ட இவ்வாண்டின் கவிமணி விழாவை 13-4-70-ல் வேகுநகர் ஆ. வ. இராமனுதன் செட்டியார் M. A. அவர்கள் துவக்கி வைத்தார்கள். தவத் திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களை நடுவராகக் கொண்ட பட்டிமன்றத்தில் சீர்சால் சிலம்பில் சிறப்புடையவள் கண்ணகியே என திருவாளர்கள் அ. வ. இராச கோபாலன், கதி. சுந்தரம், சூ. இன்னசி, திருமதி. சரசுவதி இராமனுதன் ஆகியோர் வாதிட, அதை மறுத்து மாதவியே என திருவாளர்கள் சோ. சத்தியசீலன், மு. கணபதி மா. கண்ணப்பன் ஜவஹர். ஆகியோர் வாதிட்டனர். அடிகளார் தம் தீர்ப்பை மாதவிக்கு தந்தார். இந்த ஆண்டின் புதிய நிகழ்ச்சியாக திருச்சி மல்லிகை இசைக் குழுவினர் இசை விருந்தளித்தனர்.

பதின்மூன்றும் ஆண்டு கவிமணி விழாவை செட்டிநாடு அரசரின் செல்வர், திரு. மு. அ. மு. இராமசாமியவர்கள் துவக்கி வைத்தனர். உலகம் சுற்றிய தமிழர் திரு. சோம. லெ. தலைமையில், திரு. க. அறிவழகன் M. A. M. L. C. அவர்களும், திருக்குறளார். வி. முனுசாமி அவர்களும் திருமதி மரகதம் தாஸ் அவர்களும் செல்வி மரகதமணியும் உரையாற்றினார்கள். கவிமணி அவர்களின் பெயரர் கவிஞர் இ. குற்றுலம் அவர்கள் இவ்வாண்டுவிழாவில் பங்கேற்று பெருமைப்படுத்தினார்கள். இரவினில் பள்ளி மாணவர் பங்கேற்ற பக்த பிரகலாதன் நாடகம் நடைபெற்றது. அழ. குமரப்பன் அவர்கள் செயலராகப் பணியாற்றிய இவ்வாண்டின் உறுப்பினர் எழுபத்து நான்கு.

திரு. வெ. ச. திருப்பதியை செயலராகவும் திரு. மு. தேனப்பனை இணைச் செயலராகவும் கொண்ட இப் பதினுன்காம் ஆண்டு ஒரு நாள் விழா இருநாள் விழாவாக மாறும் பெருமையைப் பெருகின்றது.

வளர்ந்து வரும் இம்மன்றம் ஆண்டிற்கு இருமுறை உறுப்பினர்களின் பேரவையைக் கூட்டி மன்றவளர்ச்சி பற்றி திட்டமிட்டு செயலாற்றி வருகின்றது. தேனொழுகக் கவிபாடிய தேசிக விநாயகத்தின் புகழ் பரப்பமுனைந்துள்ள இம்மன்றத்தின் இப்பதினான்கு ஆண்டு வளர்ச்சி சிறந்த பெரும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒன்றாகும்.

இப்பதினான்கு ஆண்டின் வளர்ச்சியை நினைத்துப் பார்க்கின்றேன் நெஞ்சமெல்லாம் இனிக்கிறது. இவ்வளர்ச்சிக்கு காரணமான அனைவரையும் என்நெஞ்சு நினைக்கிறது, வணங்குகிறது.

K. பாலகுருவ செட்டியார் சன்

130, வெங்கடரங்கம் பிள்ளை, தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

தொலை பேசி எண் 810382.

K.B. SON
STAINLESS STEEL

எங்கள் "யானை மார்க்" (ELEPHANT BRAND) ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் டிபன் கேரியர்கள் நீடித்த உழைப்பும், கருக்காததும், கைக்காததும், வேலைப்பாட்டில் மிகவும் உயர்ந்ததுமாகும். எனவே எப்போதும் **'யானை மார்க்'** டிபன் கேரியர்களையே விரும்பிக்கேட்டு வாங்குங்கள்.

எங்கள் விற்பனை ஏஜெண்ட் :-

திரு. ஆர். தாமோதரன்,

நெ. 7, லட்சுமி நாரராயண பெருமாள் கோயில் தெரு.

(கெங்குரெட்டி தெரு சமீபம்)

எழும்பூர், சென்னை-8.

தொலை பேசி எண். 25375.

கவிமணி

'சோமலெ'

குருவிக்கொண்டான் பட்டியில் கவிமணி மன்றம் 14 ஆண்டுகளாக சிறந்த முறையில் கவிமணியின் புகழைப் பரப்பி வருகிறது. கவிமணியின் பேரரான கவிஞர் இ. குற்ருலம் பிள்ளை அவர்களையும் கவிமணியிடம் ஈடுபாடுடைய என் போன்ற பலரையும் அழைத்து கவிமணியின் புகழைப் பரப்பியிருக்கிறது. இவ்வாண்டில் மலர் வெளியிடுவதை அறிந்து மகிழ்கிறேன்.

கவிதை என்ருல் விளங்காத பொருளை, வழக்கொழிந்த நடையில், எதுகை மோனையுடன் சொல்லுவது என்ற நிலையை மாற்றியவர் கவிமணி.

" உள்ளத் துள்ளது
கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த
தமிழில் - உண்மை
தெரிந்துரைப்பது கவிதை"

என்று கவிதைக்கு இலக்கணம் வகுத்தவர் நமது கவிமணி அவர்கள்.

கவிமணியின் பாடல்கள் கற்றவர்களையும் கல்லாதவர்களையும் கனிந்துருக வைக்கும்; பாட்டாளி மக்களுக்குப் பரவச மூட்டும்; ஏழை எளியவர்க்கு இன்பத்தை நல்கும்; ஐந்து வயதுக் குழந்தைகளை ஆடிப்பாடச் செய்யும்; பூவையும் புல்லையும் பேசவைக்கும்; குருடனையும் குதிரையையும் புலம்பவைக்கும்; கோழியையும் கிளியையும் கேட்க வைக்கும்; பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும் அத்தனைக்கும் தித்திக்கும் அரிய சுவைக் கரும்பு என்று அவர் கவிதைகளைச் சொல்லலாம்.

" வெண்பாவிற் புகழேந்தி" என்ற வாக்கை, " வெண்பாவில் தேசிய விநாயகம்" என்று இக்காலத்திற்கேற்பச் சொல்லலாம் என்று தோன்றுகிறது. 14 சீர் விருத்தங்கள், நீண்ட ஆசிரியப் பாக்கள் ஆகியவற்றைக் கவிமணி அருமையாகவே பாடுவார். வெண்பாக்கள் அவர்களுக்கு இயல்பாக வரும். இயற்கையாக வரும். தண்ணீர்போல வரும். எதுகை மோனைக்கு அகராதி வைத்துப் புரட்டிப் பார்த்து அவர் தேடிப் பிடித்ததில்லை. சொற்களை எளிதில் கையாளும் ஆற்றல் அவருக்கு இருந்தது. கவிதைகள் சிலவற்றை இயற்றும்போது உடனிருக்கிறேன். அவர்கள் சில கவிதைகளைச் சொல்ல, யான் எழுதிக்கொண்டதும் உண்டு. ஒரு தடவை ஒரு பாட்டைப் பாடிவிட்டால், ஒருகாலும் அவர்களுடைய மனத்தை விட்டு அகலாது. ஒரு கவிதை இயற்றிவிட்டால் அந்தக் கடிதம் தபாலில் சேர்க்கப்படும் வரை அல்லது அந்த நூல் அச்சுக்கு அனுப்பப்படும் வரை, பாட்டில் ஏதாவது திருத்தங்கள் செய்யலாமா என்பதைப் பற்றியே சிந்தனை இருக்கும். சில சமயங்களில்

எங்கள் தயாரிப்பான "K. R. S." பிராண்டு ஸ்டெய்ன் லெஸ் ஸ்டீல் பாத்திர வகைகள் மிகவும் உயர்ந்த வேலைப்பாடு உள்ளதாகவும், நீடித்த உழைப்பானதுமாகும்.

முக்கிய பாத்திர வகைகளான :—

குத்து விளக்குகள், ஸ்குருமூடியுள்ள குடங்கள், கூஜா, தவலை, இட்லி பாத்திரங்கள் முதலியன

கலியாண சீர் வரிசைக்கு உகந்ததாகும். எப்போதும், "K.R.S." பிராண்டு ஸ்டீல் சாமான்களையே விரும்பிக் கேட்டு வாங்குங்கள்.

தயாரிப்பாளர்கள்

South Indian Cottage Industries,

IMPORTERS & EXPORTERS.

46. Malluga Jetty Street,

KUMBAKONAM,

(THANJAVUR DISTRICT,)

Telegram : "KOOJA" **TELEPHONE No: 490.**

பாட பேதமாக, சில பாடல்களை இயற்றுவார்.

கவிமணி அவர்கள் ஆடம்பர மற்றவர்; பதவி விரும்பாப் பண்பினர்; பிறர் குறை காணாப் பெருந்தகையார்; பெரும் புகழால் நிதானம் இழக்காத பேரறிஞர்; அவருடைய உள்ளம், பேச்சு, செயல்-எல்லாம் அன்பு.

"பாலைவனம் சோலைவன
மாகவேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து
பாடவேண்டும்
சாலைகளிற் பலதொழிலும்
பெருகவேண்டும்
சபைகளிலே தமிழெழுத்து
முழங்கவேண்டும்"

என்பது அவருடைய விருப்பம்.

காதில் பழைய காலத்துக் கடுக்கன், வைதிகத்துக்கு எடுத்துக் காட்டாகத் தலையில் 4, 5 மயிர்கள், திருநீறு பூசிய நெற்றி, இடுப்பிலே ஒரு முண்டு, மேலே போர்த்திய ஒரு துவாலைத் துண்டு, இளைப்பாலும் 'எக்சிமா' என்னும் சொறி சிரங்கு நோயாலும் துன்பப்படும் உடம்பு, சிரித்த முகம் இவ்வாறுதான் கவிமணி காட்சி தந்தார்.

கவிமணியின் பாடல்களை முதலில் வெளியிட்டவர் காரைக்குடி சொ. முருகப்பா அவர்கள். "குமரன்" பத்திரிகையில் 'கருணைக்கடல்' வெளிவந்த பின்னர், தேசிய விநாயகம் பிள்ளையின் புலமையை அறிந்து பாராட்ட முன் வந்தவர் டி. கே. சி. அவர்கள். விளம்பரம் விரும்பாமல் மூலையில் முடங்கிக் கிடந்த கவிமணியைத் தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் தெரிய வைத்தவர் டி. கே. சி. "கண்ணாரக் காண ஒரு கவிஞர்" என்று டி. கே. சி. கவிமணியைச் சிறப்பித்திருக்கிறார்.

கவிமணி கட்சிப் பற்றற்றவர். அதுபோலவே பொருள்-பேற்றும் அளவு கடந்த பணத்தைச் சேர்க்க வேண்டுமென்ற எண்ணமும் அவருக்குக் கிடையாது. அரசாங்க வேலையில் இருந்ததால் தமக்குக் கிடைத்து வந்த ஓய்வுச் சம்பளமே அவருடைய செலவுக்குப் போதியதாக இருந்தது. ஒரு தடவை, ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் கவிமணிக்கு ஓராயிரம் ரூபாய் வழங்கினார்கள். கவிமணி அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. பின்னர், அந்தப் பணத்தை வெள்ளிச் சாமான்களாக மாற்றி, டி. கே. கி. திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளை ஆகியோர் வாயிலாக ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அனுப்பி வைத்தார். இதையும் மறுக்க இயலாத நிலையில், பொருள்களைத் தாம் ஏற்றுக் கொண்டு, அதற்குரிய ஓராயிரம் ரூபாயை தம் பணத்திலிருந்து எடுத்து, திருவாங்கூர் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி, தம் தாயார் பெயரால் பி. ஏ., வகுப்பில் தமிழ் மாணவர்களுக்கெனப் பரிசு வழங்க ஒரு நிதி ஏற்படுத்தினார். மற்றொரு தடவை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் கவிமணியைக் கௌரவப் பேராசிரியராக நியமித்து ஆண்டுதோறும் அவர்களுக்கு ஒரு தொகையை அன்பளிப்பாகத் தர விரும்பினர். இதையும் கவிமணி விரும்பவில்லை. அவருக்காக நிதி சேர்ப்பதற்குச் சிலர் முயலுவதாகத் தெரிந்த போதும், கவிமணி அந்த முயற்சியைத் தடுத்தார். இவற்றிலிருந்து அவருடைய எளிய வாழ்க்கையும் உயர்ந்த இலட்சியங்களும் தெளிவாகும்.

It's the 'made for each other' blend that set the filter trend!

Maximum Price
Rs 1.20 for 10, Rs 2.40 for 20
subject to local taxes



Wills Filter

THE WILLS HOUSEMARK OF QUALITY

Largest-selling filter cigarette in South Asia.

WF 5339/RJ

“ கவிமணிமாலை ”

இயற்றியவர்: இராமதி. இராசன்

(வெண்பா)

கொண்டாடும் தேசிகவி நாயகனை யேத்துதற்கு
வண்டமிழில் வித்தகர்கள் சூழ்ந்திருப்ப மண்டான
என்னிடத்தே வந்து கவிமணியார் சிக்கியதால்
கன்னித் தமிழேதான் காப்பு!

(கலி வெண்பா)

தேரூரில் சாமிநாத நல்முதலி யாரன்று
ஆரூரன் பாலன்பு கொண்டிருப்ப— சீரூர்
பெருகி செழுமை பெறச்செய்தா ரென்கின்ற
பேருடைய இவ்வணிகர் தொண்டின்— அருளால்
சந்ததியா ரெல்லாம் சிறப்புற்றார் செல்வாக்கில்
இந்தக் கொடிவழியே தோன்றிய— சாந்தச்
சிவதாணுப் பிள்ளைக்கும் செல்லத் துணையாள்
தவமகள் ஆதிலட்சு மிக்கும்— அவதரித்த
தேசிகவி நாயகத் தீரன் ஆன்றோரின்
ஆசிகள் பெற்றே வளர்ந்திருப்ப— பேசிடும்
பாலப் பருவமதில் வாணன்திட் டில்வதிந்த
சாலச் சிறந்திட்ட சாந்தலிங்கன்— காலத்தில்
கல்வியைத் தேசிகனுக் கூட்டிடவே பின்னாளில்
சொல்வளச் சங்கர லிங்கனென்னும்—வல்லவத்
தம்பிரான் தீந்தமிழ் தந்திடவும் தேரூரின்
நம்பிகள் போற்ற நிமிர்ந்ததுவும் பெம்மான்
உமையொருபா கக்குருக்க ளென்பா ரன்பால்
சமைத்திட்டார் சைவ சிவதீட்சை— தீமையே
கிஞ்சித்தும் காணாத கண்ணியக் காவலன்
நாஞ்சில்நாட் டானெனும் நாமமுடன்— வஞ்சமிலா
உள்ளத்தாற் பொய்யா தொழுகியே கோட்டாற்றில்
கள்ளூறும் கல்வி முடித்ததுவும்— தெள்ளிய
கல்லூரி வாயிலில் கால்வைத்த சின்னாளில்
நல்லரும் தந்தையார் நீங்கியதால்— சொல்லரும்
துன்பமும் தொல்லையும் தீர்ந்ததன் பின்புதாம்

இன்பமா மில்லற வாழ்வினுக்கு— அன்னை
விருப்பத்துக் கொப்ப விநாயகன் தானும்
இருபத்தைந் தாமகவை இந்நாளில்— சீருடைய
புத்தேரியிற் றோன்றிய பாவை உமையம்மை
அத்தேவியை யேற்றான் மனையாளாய்— உத்தமி
இப்பெண்ணின் மேனிதாம் கூன்வளைவு மாண்பெனில்
ஒப்புமை இல்லையே பூவுலகில்— தப்பாமல்
இல்லாளைப் பற்றி இயம்பிடுவான் மாப்புலவன்
அல்லலின்றிக் காப்பவ னென்றேதான்— நல்லார்
இராசாசி கண்டொருநாள் கற்றபய னுற்றேனென
வீராவே சத்துடன் விண்டுரைத்தார்-ஊரார்
வியக்கவே செல்விருந் தோம்பி வருவிருந்தை
ஓயாது பார்த்துவரு மந்நாளில்— உயர்நிலை
ஆசிரிய னாகி யறச்சேவை ஆற்றிடவே
வீசியது நற்புகழ் கோட்டாற்றில்— தூசியென
அல்லல் அகற்றித் திருவனந்த ஊர்ப்பெண்கள்
கல்லூரிப் பேராசா னாகிடவும்— வல்லான்
விரிவுரை யாளன் தமிழ்ப்பே ரறிஞனெனும்
நேரியபட் டங்களேந்தி நாடுபோற்றும்— சூரிய
காந்தளூர்ச் சாலையெனும் கட்டுரையும் பாநயத்துச்
செந்தமிழ்நூல் ஆசிய சோதியும்— சிந்தனையைத்
தூண்டுகின்ற நல்மலரும் மாலையும் இங்கிதமாய்
விண்டுரைக்கும் தேவியின் கீர்த்தனையும்— மூண்ட
உமர்க்கய்யாம் பாக்களும் உண்மை யுரை
தமிழ்மருமக் கள்வழி மான்மியமும்— தேமதுர
கோவில் வழிபாட்டுக் காதை பலவும்
கவிமணியின் நல்ல உரைமணியும்— காவியத்
தேனும் அழகம்மை ஆசிரிய நல்விருத்தம்
அன்பொழுகு நூல்சுசீந்தை மாலையுமாய்— ஏனைய
இத்தனையும் இன்னும் பலவா மிலக்கியமும்
கொத்தாகத் தந்தானே தாரணிக்கு— சித்தனவன்
சென்னைமா காணத் தமிழ்ச்சங்கச் சான்றோரின்
இன்பப்பா ராட்டினை சூட்டியதும்— அன்பொழுகும்
பச்சையப்பக் கல்லூரி ஏழாவ தாண்டதனில்
கச்சிதமாய் மூண்ட விழாவதனை— நிச்சயமாய்
வள்ளலெனும் முத்தையாச் செட்டி துவக்கிடவே
தெள்ளுதமிழ் நூலாய்ந்திட் டாசானே— பிள்ளைத்
திவானும் பகதூர்நா ராயண சர்மியென்பார்
ஓவியமா யேற்றிட்டா ரேதலைமை— நாவளவத்

தீந்தமிழ்வேள் நல்லுமாம கேசுவர னாரென்பார்
செந்தமிழ்வி நாயகனுக் காக்கினார் — அந்தமிலாப்
பாயாத்த லாலே கவிமணியென் கின்ற
உயர்பெரும் நற்புகழ்ப் பட்டமதை — தேயத்துச்
சான்றோர் பெரியோரும் தேசிகவி நாயகனின்
ஆன்றறிந்த ஆய்வினுக் கேற்றதென்றார் — குன்றாத்
தகவுடைய பெற்றியரைத் தூயவுரு வாக்கும்
முகவையெனும் மாவட்டச் சீமைதனில் — யோகபுரி
ஆத்தங் குடிவாழும் ஆர்வமுள்ள மக்களெல்லாம்
நேத்திக் கடன்போல் முழக்கமிட — நித்தியமும்
ஈட்டிய செல்வமெல்லாம் நாட்டுநல னுக்காக்கும்
செட்டிநாட்டு அண்ணாமலை வேந்தரும் — பாட்டுக்
கவிமணியைப் பாராட்டிக் கூறி வரவேற்க
கூவிப் புகழும் முருகப்பன் — ஆவிக்
கலப்புநண்ப ராகும் ரசிகமணி போல்வாரும்
சாலவும் ஏற்றித் துதித்திடவும் — கோலமுடன்
பொன்னாடை போர்த்தியும் வெள்ளியாற் பேழையும்
இன்னபிற செல்வமு மீந்ததுவும் — இன்பமுடன்
அண்ணாமலை மன்னர்தம் மாளிகைக் கிட்டுவந்து
ஒண்ணாப்பு கழ்க்கவிஞ னைப்போற்றி — உண்ணும்
விருந்து படைத்திட்டோ ராயிரமும் நல்கியதை
ஆருயிரன் பர்குமர னாசான் — முருகப்பன்
என்பானி டம்கொடுத்தார் பாவலரே நண்பரிடம்
சென்றபண மத்தனையும் மாக்கவியின் — அன்பில்ல
மெல்லாமும் வெள்ளிப்பாண் டங்களாக மாறியதைச்
சொல்வல்லான் பார்த்ததை ஈடுகட்டி — நல்ல
தமிழினில் முன்னோக்கித் தேர்வுறு வார்க்கன்னை
நாமத்தி னோர்பரிசா மென்று சேமத்
திருவிதாங்கூர்ப் பல்கலைக் கூடத்திற் களித்தார்
அருஞ்செய லுக்காக வப்பணத்தை — திருவான
நெல்வேலி மக்களும் தேசிகவி நாயகனை
நல்லாசி கூறி வரவேற்று — உல்லாச
நாட்டியமும் நல்விருந்தும் நேர்த்தியுறும் பொன்தகட்டில்
பட்டயமும் பாராட்டும் நல்கிடவே — திட்டமுடன்
நாகர்கோ யில்வாழும் நன்மக்கள் கூடியொன்றாய்
ஏகமனத் தோடு கவிமணிக்கு — சேகரனும்
நீதிபதி சத்தியநே சன்தலைமை யில்வாழ்த்துச்
சேதிகளைச் சொல்லிச்சீ ராட்ட — புதுவை
அரவிந்த ராசிரமத் தில்வதிந்த யோகிகவி

பாரதிசுத்	தானந்தர்	பாவால்—	வரலாறாய்ச்
செய்து	வனப்புடன்	சூட்டினார்	தேசிகவி
நாயகனின்	வாழ்க்கை	தனையே—	செயலிற்
சிறந்தசி	தம்பரக்கி	ருட்டின	ரென்னும்
திறந்த	மனத்துடைய	செம்மல்—	திறமுடன்
கல்வெட்டா	ராய்ச்சியி	லொத்துழைத்த	நண்பரிவர்
செல்லாயி	டத்திற்கே	சென்றதனால்—	சொல்லரும்
காந்தளூர்ச்	சாலையெனா	மரங்கிலக்	கட்டுரையை
பாந்தமுடன்	காணிக்கை	யாக்கியதும்—	சொந்தமாம்
ஊரெனுந்தே	ரூரில்	கவிமணியி	னல்நினைவாய்
சீரெனும்	மண்டபத்தை	யாக்கினதும்—	தீராத
மக்களி	னாசைதா	மெக்குறையு	மில்லாத
தக்கதொரு	மேன்மைகள்	பெற்றிருந்தும்—	சிக்கலுறு
நோய்கள்	தொடர்ந்துதேய	மெங்குமுள்ள	வைத்தியரைப்
போய்ப்பார்த்தும்	மேனியொன்றுந்	தேறவில்லை—	ஆய்வுரையாம்
கூற்றெதையும்	பின்பற்றிக்	கைக்கொண்டு	முண்டதெதும்
ஏற்றதென	வாகவில்லை	யானதனால்—	உற்றதொரு
சத்திரச்சி	கிச்சைகளும்	சித்தவைத்தி	யங்களேதும்
ஒத்துவர	வில்லையு	டம்பினுக்கே—	இத்தரையில்
ஏழுபத்து	மெட்டாண்டை	எப்படியோ	ஓட்டியவர்
வாழுமுறை	இஃதெனக்	காட்டிவிட்டு—	சூழுபுகழ்க்
காலெடுத்துப்	பாநயத்தால்	ஞால	மளந்தசெம்மல்
மாலையிரண்	டாமோ	ரரைமணியில்—	கோலமிகு
ஞாயிற்று	நன்னாளிற்	நற்தூக்கந்	தூங்கினன்
போயிற்று	நல்லுயிர்தாம்	அம்மாவோ—	சேயற்ற
தாய்போற்	தவித்ததுவே	தீதறியாத்	தென்னகமும்
போய்யார்தா	மீட்டிடுவா	ரின்னுயிரை—	மெய்யுடனே
ஓய்ந்து	முடிந்ததுவு	மோருயிர்தா	னென்றாலும்
ஆய்ந்த	றிவுணர்ந்த	ஆன்றோரும்—	உய்யவெனப்
பாய்ந்து	பாயாத்த	பாவலரும்	நற்றமிழில்
தோய்ந்து	நனைந்திட்ட	நாவலரும்—	வையமதில்
சாய்ந்து	தலைகவிழ	நேர்ந்ததுவே—	பொய்யுரையாப்
பாவலரின்	பொன்னுடலு	மூர்வலமாய்	நன்காட்டை
மேவிய	தாயிரவர்	சூழவொன்றாய்—	கூவினரே
கோமகனா	ரீமத்துக்	காணாகாக்	காட்சிகண்டு
சேமமுறு	மான்றறி	வாளரெல்லாம்—	தேமியழப்
பாமணக்குந்	தேயமெலாம்	பேர்மணக்கு	மாதலினால்
பூமகனின்	பூதவுடற்	போனாலும்—	நாமென்றும்
எத்திக்கும்	போற்றிடவே	தித்திக்கும்	பாக்களினை
வித்திட்ட	நாயகனை	வாழ்த்திடுவோம்.	

"விநாயகம் பிள்ளையின் விண்ணப்பம்"

வெ. ச. திருப்பதி

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் தமிழரின் தனிப் பயனாய் அவதரித்தார். தமிழ்த் தாய்க்கு தன் கவிதைகள் மூலம் மென்மேலும் புகழ் சேர்த்தார் அதோடு மட்டுமல்லாமல் நாட்டு மக்களின் நல்வாழ்வை மனத்தில் கொண்டு பல அறிவுரைகள் அடங்கிய கவிதைகளை வெளியிட்டார். அவைகளில் ஒன்றுதான் ''விண்ணப்பம்'' என்ற கவிதை.

தனது கவிதையிலே கவிமணி அவர்கள் பாலைவனம் சோலைவனமாக வேண்டும் என்றும் பசுங்கிளிகள் அங்கிருந்து பாடவேணும் என்றும் விரும்புகிறார். கவிஞரின் எண்ணம் உயர்ந்த எண்ணம். பாலைவனத்தையும் நம்மால் சோலைவனமாக்கிவிடமுடியும் என்ற நம்பிக்கை வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

மேலும் சர்லைகளில் பல தொழில்கள் பெருகவேண்டும். சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார். பல தொழில்கள் பெருகினால் ஏராளமான பேருக்கு வேலை கிடைக்கும், மக்களிடம் வேலை இல்லா திண்டாட்டம் ஏற்படாது. எல்லா இடங்களிலும் தமிழ்தான் காணப்பட வேண்டும் என்பது அவரது ஆசையாகும்.

இதைவிட முக்கியமாக ஒரு ''விண்ணப்பம் விடுக்கிறார். அது யாதெனில் ''கஞ்சாவை நஞ்சாகக் கருதவேண்டும். கள்ளொழுகுங் கடவாயை மூடவேண்டும்'' என்பதாகும். கவிஞர் பெருமான் அவர்கள் தீமையான பழக்க வழக்கங்களை அறவே வெறுக்கிறார் எனவே தான் அவர் கஞ்சாவை நஞ்சாகக் கருதவேண்டும் என்கிறார். ;கள்ளின் கொடுமையும் போதை வஸ்துக்களின் தீமையும் மக்களிடம் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்கிறார்.

அஞ்சாத வீரரெங்கும் தோன்ற வேண்டும் என்றும் என்சாதி உயர் சாதி இழிந்த சாதி என்று சொலநாவுமெழாதிருக்கவேண்டும் என்று கூறுகிறார். நாவு மெழா திருக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தின் மூலம் நாட்டு மக்களிடம் வீர உணர்வைத் தூண்டி விடுகிறார். பின், சாதி மத வேறுபாடு பற்றி பேச எழாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறார் இன்னும் அவர்.

பருவமழை பொய்யாது
  பெய்ய வேண்டும்;
பயிர்களெல்லாம் செழுத் :
  தோங்கி வளரவேண்டும்
தருமநெறி தவறாது
  தழைக்கவேண்டும்;
சாதிமதச் சண்டையெல்லாம்
  ஒழியவேண்டும்

Food becomes more appetising
when prepared
with

RISING SUN BRAND
MAIDA, SOOJI & ATTA

Manufactured by:

CENTURY FLOUR MILLS LIMITED

INDIAN CHAMBER BUILDINGS,
(1st FLOOR)
ESPLANADE, MADRAS-1.

Grams: "CENTURY"
Phone: Office: 21043 (2 lines)
Mills: 61701

திருமகளும் கலைமகளும்

சிறக்கவேண்டும்

தேசாபி மானவெங்கும்

திகழவேண்டும்.

என்று வரிசையாக வேண்டிக் கொண்டே செல்கிருர். இந்த வேண்டுதல்களெல்லாம் யாருக்காக? மக்களுக்காக’ மக்களின் நல்வாழ்விற்காக இந்த ஒரு கவிதையிலிருந்தே கவிமணி அவர்களின் பொதுநல நோக்கையும் மக்களிடத்தில் அவர் கொண்டுள்ள அன்பையும் தெரிந்து கொள்ளலாம். அவர் கூறிய வேண்டுகோள்களை மக்கள் தங்கள் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு இவ்வுலகில் நற்புகழுடன் வாழ வேண்டுகிறேன்.

★

தர்ம சாஸ்த்தா துணை

திருமணத்திற்கு வேண்டிய

கற்சாமான் சோடிப்புகள்

அழகுடனும், மலிவாகவும் குறித்த

நேரத்தில் செய்துதரப்படும்,

பெரிய செட் 1க்கு ரூ. 307-00

நடுத்தர செட் 1க்கு ரூ. 219-00

சிறிய செட் 1க்கு ரூ. 169-00

கட்டிட வேலைகளும், கோவில்

திருப்பணி வேலைகளும்,

விக்கிரகங்களும் செய்து

—: தரப்படும் :—

விபரங்களுக்கு :

வீர. வெற்றிவேல் ஆசாரி

கல்பட்டறை,

குருவிக்கொண்டான்பட்டி

திருச்சி மாவட்டம்.

முருகா

...தமிழ்ப் படித்த ஆசிரியன்

ஞானந் தவறிடினும்
நாள்தவருமல் தமிழை

தேனென்று வாரித் திகட்டா
தளித்துவரும்

ஆனந்தவாரி! ஐயன் திருமுருகன்

வேலை வணங்குவதே
வேலையெனக் கொண்டுவிட்ட

சோலை இளங்காற்றே
சொல்லுக்குச் சொல் சுவையை

மாலையெனத் தொடுக்கும்
வண்ணத் தமிழ்க்கடலே

......நெஞ்சின் அருள் வணக்கம்!

-கவியரசு கண்ணதாசன்

மொத்தமாகவும், சில்லறையாகவும்

நெல், மர்வு வகைகள்

அறைத்துக் கொடுப்பதற்கு

—: சிறந்த இடம் :—

சொக்கலிங்கம்

நெல் அறவை ஆலை

குருவிக்கொண்டான்பட்டி.

With best compliments from

LEATHER
EXPORT
PROMOTION
COUNCIL

"Marble Hall"
3/38, Vepery-
High Road
Madras-3
Gram: 'Lexprocil'
Phone: 33498
Telex: Ms. 7354

திருவருள்

திருமுருக குகஸ்ரீ கிருபானந்தவாரியார்

அனந்தன் : வாருங்கள் வாருங்கள், நான் தங்களைக் காண வேண்டும் என்று மிக்க ஆர்வமாக நினைத்துக் கொண்டிருந்தேன். தெய்வத் திருவருள் கூட்டி வைத்தது. எல்லாம் நலந்தானே ?

அறிவாகரன் : அண்ணே! எல்லாம் நலந்தான். தாங்கள் ஒரு பழங்காலத்து மனிதர். படித்திருக்கின்றீர் ; இருந்தும் அறிவில் தெளிவு இல்லை. எல்லாம் தெய்வத் திருவருள், திருவருள் என்று எப்போது பார்த்தாலும் கூறுகின்றீரே! இது சிறிதும் அறிவுக்குப் பொருந்தவில்லை. பிரயத்தனம்தான் முக்கியம். அதாவது தன் முயற்சி, இது இன்றி தெய்வயத்தனம் என்பது வீண் பிதற்றல், தெய்வத் திருவருள், தெய்வயத்தனம் என்று வீணே சோம்பிக் கிடக்கலாமா? எல்லாம் பிரயத்தனத்தால் தான் நடக்கும்.

அனந்தன் : தாங்கள் சொல்வதிலும் சிறிது நியாயம் உண்டு. மனிதயத்தனமும் வேண்டுந்தான். ஆனால் மனிதயத்தனம் மட்டும் இருந்து என்ன பயன். திருவருள் கூட்டிவைக்க வேண்டும். மனிதயத்தனம் நிலத்தை உழுவது போலும் ; விதை விதைப்பது போலும், தெய்வயத்தனம் மழை பொழிவது போலும். மழையின்றி உழுதும் விதைத்தும் பயன் விளையாதல்லவா ? ஆதலால் எல்லாம் தெய்வயத்தனப்படி நடக்கும்.

அறிவாகரன் ; அண்ணே! வீணை தர்க்கஞ் செய்யாதீர், நானும் கொஞ்சம் அறிவாளிதான். தெய்வயத்தனம் என்று வாய் வேதாந்தம் பேசிக்கொண்டிருந்தால் வயிறு நிரம்புமா? அரிசியைக் குத்தவேண்டும் ; சமையல் செய்ய வேண்டும் ; இலையில் படைக்கவேண்டும். இவ்வளவு செய்தாலும் போதாது. தெய்வயத்தனம் என்று சும்மா கிடந்தால் படைத்த அன்னம் வாய்க்குள் தானே நுழையுமா ? எடுத்து உண்ண வேண்டும். உண்டால் மட்டும் போதாது. விழுங்க வேண்டும்.

அனந்தன் : நில். இதுவரை மனிதயத்தனம் சரி, அதற்கு மேல் நடப்பது தெய்வயத்தனம். விழுங்கிய சோறு முதலிய உணவுகளை, அங்கே அரைப்பதும், வேக வைப்பதும், செறிக்கச் செய்வதும், சத்தையும், அசத்தையும் பிரிப்பதும் ஆகிய இந்தச் செயல்கள் நம்மால் தான் ஆகின்றனவா ? உண்டு உறங்குகின்றோம். நாம் உறங்கினாலும் ஒரு சக்தி உறங்காமல் இருந்து உண்ட உணவைச் சீரணம் புரிய வைத்து நம்மை உடன் இருந்து அருள் புரிகின்றது. அது தான் தெய்வத் திருவருள். அதனை நினையாதவன் அறிஞனாக மாட்டான்.

இவ்வாறு அனந்தனும் அறிவாகரனும் தமக்குள் தெய்வயத்தனம் சிறந்தது என்றும், பிரயத்தனம் சிறந்தது என்றும் பலகா

லும் வழக்கிட்டு வாதிட்டார்கள். வரவர இந்த வாதம்வலுப்பட்டது.

இருவரும் ஒருநாள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அந்த ஊரை யாளுகின்ற அரசர் ஒப்பற்றஉணர்வும் பேரறிவும் படைத்தவர். அவரிடம் கூறி நியாயம் உணரவேண்டும் என்று திட்டஞ் செய்தார்கள்.

அரசனிடம் போய் இருவரும் தமது கட்சிகளைக் கூறினுர்கள். மன்னர் பெருமான் இருவருடைய வாக்கு மூலங்களையும் கேட்டனர்.

மன்னர் சற்றுநேரம் மௌனமாக இருந்தார்! ம்...... என்று பெருமூச்சு விட்டார். இருவரும் தத்தம் கொள்கையை நன்ருகவும் நியாயமாகவும் அழுந்தந் திருத்தமாகவும் கூறி நிலை நாட்டுகின்ருர்கள். இனி இவர்களுக்கு அநுபவ பூர்வமாக உணர்விக்க வேண்டும். அப்போது தான் இவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று அறிவாற்றல் படைத்த அரசர் கோமகனுர் எண்ணினுர்.

மறுநாள் காலையில் இருவரையும் அழைத்தார். "இன்று நீங்கள் என் கட்டளைப்படி நடக்க வேண்டும். இன்று நீவிர் இருவரும் உபவாசம் இருக்கவேண்டும். ஒன்றையும் அருந்தக்கூடாது" என்று கூறி இருவரையும் ஒருபுறத்தே இருக்குமாறு செய்தார்.

அனந்தன் என்பவன் "எல்லாம் ஈசன் செயல், தெய்வத் திருவருளின்படியே யாவும் நடைபெறும்; நன்றே வரினும் தீதேவரினும் நான் இதற்கு அஞ்சேன். அனைத்தும் அவன் செயல்" என்று எண்ணி மனதை ஒரு முகப்படுத்திக் கொண்டு சிவ மந்திரம் ஜெபித்துக் கொண்டிருந்தான். அறிவாகரன், "இந்த அரசனுக்கு என்ன மதியீனம்? நம்மை ஏன் பட்டினி போடுகின்ருன். சுத்த மண்டு; இது அவசியம் இல்லாத ஒரு செயல்; என்ன செய்வது? அரசனுடைய ஆணைக்கு அடங்கித் தானே ஆகவேண்டும். உரலிலே தலையை நுழைத்துக்கொண்டு உலக்கைக்குப் பயப்படக்கூடாது தானே. இந்த அனந்தனிடம் வாதிட்டிருக்கக்கூடாது" என்றெல்லாம் எண்ணி மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தான்.

இரவு 10 மணி ஆயிற்று; அந்த ஊரில் வரதமான ஒரு அம்பிகை ஆலயம் இருந்தது. மன்னவர் அம்பிகைக்கு முன் ஒரு வெண்கலப் பானையில் நெல் மிதக்கும் படி கற்கண்டு சாதம் வைத்து விளக்கை யணைத்து விட்டு "நீங்கள் இருவரும் இன்றிரவு இக் கோயிலுக்குள் இருக்கவேண்டும்" என்று கட்டளையிட்டு, கோயிலுக்குள் விடுத்துப் பூட்டி விட்டார்.

இருள் நிறைந்த கோயிலுக்குள் இருவரும் நுழைந்தார்கள். அனந்தன் தேவியை மனக் கண்ணுல் நோக்கி, "அம்பிகையே! கருணையன்னையே! எல்லாம் நின் செயலே தெய்வத் திருவருளின் படி யாவும் நடக்கும் என்று கூறி விட்டு ஒரு புறத்தில் பதுமாசனம் இட்டு அமர்ந்தான். "சிவ சிவ சிவ சிவ" என்று கூறிக்கொண்டு ஒருமைப்பட்ட உள்ளத்துடன் தியானித்துக் கொண்டிருந்தான்.

அறிவாகரன், மிகுந்ததுக்கத்தை யடைந்தான் அனந்தனை நோக்கி "அண்ணே! காலையில் இருந்து ஆகாரமே இல்லை, இந்த நிலையில் நீ வரட்டுத் தவளை போல் ஏன் சிவசிவ என்று கத்தித் தொண்டைத் தண்ணீரை வற்ற வைக்கின்ருய்? உன்னுடன் சேர்ந்து நான் இந்த கதிக்கு ஆளானேன். திருவருள் திருவருள்

என்று கத்துகின்றாயே, ஒரு அருளும் இப்போது உதவாது'' என்று கூறினான்.

இரவு 12 மணி ஆயிற்று; அறிவாகரனுக்குப் பசி தாங்கமுடியவில்லை. மெல்ல கையாலும் காலாலும் தடவிக் கொண்டு அந்தக்கோயில் முழுவதும் சுற்றினான் அம்பிகைக்கு முன்பிருந்த வெண்கலப் பானை கிடைத்தது மெல்ல அதில் கையை விட்டான்; நெய் மணம் மூக்கைத் துளைத்தது; கற்கண்டுப் பொங்கல் எப்படியிருக்கும் அவனுக்கு? காலையில் இருந்து ஒன்றும் சாப்பிடாமல் பட்டினி கிடந்தவன் தேவாமிர்தம் போல் இருக்குமல்லவா?

சிறிது எடுத்து வாயில் வைத்தான். தித்தித்தது. அதில் முந்திரிப் பருப்பு, சாரப் பருப்பு, பாதாம் பருப்பு ஏலக்காய். குங்குமப்பூ எல்லாம் சேர்ந்திருந்தன. மிகுந்த சுவையுடன் கூடியிருந்தது. ஆ! ஆ! என்ன அருமை. அண்ணே! இதோ பாரும்; நான் உன்னைப் போல் வரட்டுச்சித்தாந்தம் பேசிக் கொண்டு வாளாக்கிடவாமல் முயற்சி செய்தேன். கிடைத்தது பிரசாதம். நெய் ஒழுகுகின்ற கற்கண்டு சாதம். உன்னைப்போல் ஒருபுறம் கிடந்து 'சிவசிவ' என்று கூறிக் கொண்டிருந்தால் இது எனக்குக் கிடைத்திருக்குமா? ன் முயற்சிவேண்டும். இப்போதாவது தெய்வத்தனம்திருவருள்என்றபிடிவாதத்தை விட்டு விட்டு மெல்ல எழுந்து என்பக்கம் வாரும், கொஞ்சம் பிரசாதம் தருவேன்'' என்றான்

அனந்தன் ''தம்பி! மனிதப் பிரயத்தனம் அற்பப் பயனைத்தரும்; அப்பன் அருள் அளவற்ற பயனைத் தரும்ஆனால்எப்போதுதரும்? எந்த வகையில் தரும்? என்று நம்மால் வரையறுத்து அறியமுடியாது, நான் இருந்தபடியே. இருப்பேன், சிவன் செயல்படி எல்லாம் நடைபெறும் திருவருளைப் பழிக்காதே. சாமானியமான அறிவைக்கொண்டு திருவருளின் திறத்தை அறியமுடியாது. நரி வாலைக் கொண்டு கடலாழங் காணமுடியாது. 'என் செயலாலாவது யாதொன்றுமில்லை, இனித் தெய்வமே உன் செயலே என்று உணரப் பெற்றேன்'' என்பது அநுபவ மிகுந்த அருள்ஞானியின் அமுத வாக்கு. ஆதலால் நான் இங்ஙனமே யிருப்பேன், நீ பசியாறு, நீ பசியாறினால் நான் ஆறியது போல் தான்'' என்றான்.

கற்கண்டுப் பொங்கல் முக்கால் பகுதி சாப்பிட்டுமுடிந்தது. அடியில் ஒரு கோலி பருமனுள்ள கற்கள் இருந்தன. அறிவாகரன், கோயில் பிரசாதத்தில் கற்கள் இருப்பது இயல்பு தானே. ஆனால் இத்தனைப் பெரிய கல்லுகளா? அடபாபமே! இந்தக் கோயில் நிர்வாகஸ்தர்கட்கு மூளையிருக்கின்றதா? அண்ணே! 'சிவ சிவ' என்கிற உனக்கு இந்தா இந்தப்பரிசு'' என்று அந்தக் கற்களை அவன் தலையில்ஒவ்வொன்றாகஎறிந்தான்.

இருளில் அனந்தன் தலையிலும் மார்பிலும் கற்கள் வந்து வீழ்ந்தன. அனந்தன், ''தம்பி! நீயா அடிக்கின்றாய்! அம்பிகை என்னை அடிக்கின்றாள். அவளுடைய சந்நிதியில் நிகழ்கின்றவை யாவும் அவள் செயலே,'' என்று புன்னகை பூத்த முகத்துடன் அந்தக் கற்களை எடுத்து வைத்துக் கொண்டான்.

அறிவாகரன் கையையும் நாவினால் சரி செய்து கொண்டு, உண்ட மயக்கத்தில் அங்ஙனமே அயர்ந்து நன்கு உறங்கினான்.

அனந்தன் விடிகின்ற வரை சிவ நாமத்தை செபித்தான்.

விடிந்ததும், மன்னர் வந்து கதவைத் திறந்தார். இருவரும் எழுந்து அரசனை வணங்கினர்கள்.

அரசர், ''என்ன, உங்களுக்கு என்ன அநுபவம் வந்தது? இப்போது என்ன கூறுகின்றீர்கள்?'' என்றார்.

அறிவாகரன், '' அரசே ! கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? சந்தையில் அடித்ததற்கு சாட்சி வேண்டுமா? இவர் சிவ சிவ என்று இரவு முழுவதும் பட்டினியிருந்தார்; தெய்வத் திருவருள் இவருக்கு முன்னின்று அருளவில்லை. நான் பிரயத்தனப் பட்டேன்; கற்கண்டு அன்னம் பானையுடன் கிடைத்தது, உயர்ந்த நெய் மிதக்கக் கிடைத்தது. ஆ! ஆ! அருமையிலும் அருமை உண்டேன்; உவந்தேன்; உறங்கினேன், இப்போது தெம்பாக இருக்கின்றேன். ஆதலால் பிரயத்தனம் தான் சிறந்தது'' என்றான்.

'நீர் என்ன கூறுகின்றீர்?' என்று அனந்தனைக் கேட்டார்.

''நான் என்ன சொல்ல வேண்டும், ஈசன் திருவருட் செயல்படி தானே யாவும் நடைபெறும். நம்மால் ஒரு அணு அசையுமா! இரவு இவர் என்னைக் கல்லால் அடித்தார். ஆனால் இவர் அடிக்கவில்லை. இவரை அனுஷ்டித்து சிவபெருமானே அடித்தார். ''அடித்த கற்கள் யாவும் இதோ'' என்று மடியிலிருந்து எடுத்தார்!

அவைகள் கற்கள் அல்ல. மாணிக்கம், வைரம், வைடூர்யம், பச்சை, நீலம், கோமேதகம். நவரத்தினங்கள் ஒவ்வொன்றும் எத்தனையோ ஆயிரம் பொன் பெறும்.

''அறிவாகரரே! பாத்தீரா தெய்வத் திருவருளை, நான் சர்க்கரைப் பொங்கலையும். பொங்கலுக்கு அடியில் நவரத்னங்களையும் வைத்தேன். நீர் பிரயத்தனப்பட்டீர். அதற்குப் பயன் உண்டு. அது அற்பப் பயன். ஒரு வேளை பசியாறக் கூடிய பயன்.

இவர் திருவருளைத் திடமாக நம்பி தெய்வ யத்தனப்படி நடைபெறட்டும் என்று இருந்தார். நீர் வெறும் அன்னத்தை உண்டு விலை மதிக்கமுடியாத நவமணிகளை இவர் மீது எறிந்தீர். இவருக்குத் திருவருள் இருந்த இடத்தில் தேடி வந்து அருளுகின்றது. இனி இவர் ஆயுள் உள்ளவரை இந்த நவமணிகளால் கவலையின்றி வாழ்வார். எனவே மனிதயத்தனம் அற்பப் பயனையே தரும், மெய் வருந்தக் கூலி தரும். தெய்வத் திருவருள் அளவற்ற நலங்களை நல்கும், ஆகவே பிரயத்தனமும் வேண்டுந்தான். அதேசமயம் தெய்வத் திருவருளைச் சிந்திக்க வேண்டும். தெய்வயத் தனத்தைப் பழிக்கக் கூடாது. நீர் பழித்ததால் தானே உம்மிடம் கிடைத்த கற்களை இவர் மீது எறிந்து விட்டீர். இவர் அவற்றை எடுத்து சினத்தால் உன்மீது எறியாமல் தெய்வமே அடித்தது என எண்ணி அமைதி கொண்டார். ஆகவே நீவிர் இருவரும் இனியும் வாதிடாமல் செல்லுங்கள், தெய்வத் திருவருளே எல்லாவற்றுக்கும் பரம காரணம்' என்றார் மன்னர்.

அறிவாகரன் வெறுங்கையுடன் திரும்பினான் அனந்தன் நவமணிகளுடன் திரும்பினான். தெய்வத் திருவருளைச் சிந்தித்தான் : வந்தித்தான் ; வாழ்த்தினான்.

பூஜையின் பலன்

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த இறைவனை முன்னோர் வகுத்த முறைப்படி பரிபூரண சுத்தமாகவும், பக்தி சிரத்தையோடும் பூஜிக்க வேண்டும். அவ்வாறு பூஜிப்பதால் ஏற்படும் நன்மைகள்:—

பூஜை செய்வதால் சிவலோகம் கிட்டும்
புஷ்பம் சமர்ப்பித்தால் திவ்ய தேஜஸ் உண்டாகும்
சந்தனம் சாத்துவதால் கடவுள் சம்பந்தம் உண்டாகும்
ஜல ஸ்நாநத்தால் திவ்ய லோகம் கிடைக்கும்
தூபம் காட்டினால் வாயுலோகம் ஏற்படும்
தீபம் ஏற்றுவதால் சூர்யலோகம் கிடைக்கும்
நைவேத்யம் செய்தால் அமிர்தமயமான மோக்ஷமேற்படும்
மந்திரம் சொல்வதால் பாக்கியவானாகலாம்
வஸ்திரம் சாத்தினால் சந்திரலோகம் வரும்
பில்வம் அர்ச்சித்தால் எதிரிகளெல்லாம் அழிவர்
வாத்தியம் வாசிப்பதால் கந்தர்வலோக சுகமுண்டாகும்.

Vairavan Commercial Enterprises,

99-100, AMMAN SANNADHI,
POST BOX No. 175,
MADURAI-1.

Phone: 24180 Grams: ENTERPRISE

EXPORTERS, IMPORTERS & COMMISSION AGENTS
Southern Zone Distributors for SKEW PRODUCTS

A trusted Name in automobile parts
The Name well known for quality and performance.

STOCKISTS FOR:

*BM SPRINGS *GS PRODUCTS *FIL NOZZLES & ELEMENTS *SBL BALL BEARINGS *STEEL GATE PRODUCTS *CALIPLAST AUTO CABLES AND *KUNDISION AXLE SHAFTS.

With best compliments from :

ORWO FILMS EASTERN UNIT

MADRAS-6

CALCUTTA-17

(Importers and Distributors of ORWO Photo, Cine and X-Ray Films for the Southern and Eastern States of India.)

With best compliments of:

C. KALYANAM & CO.,

Tanners & Exporters,

2, Muthugramany Street,

Periamet, Madras-3.

Sri Palaniappa Transport

The only Road Transport Organization in India
utilising IBM computers for all Bookings,
;Deliveries and Accounts Data Processing.
SRI PALANIAPPA TRANSPORTS and their
clients talk to each other.
Even more they plan together.
It is co-operation
that goes beyond the industry
organization to the public at large
through our esteemed patrons.

Telex: 7180. Head Office Phone: 30116-9 &
Grams: 'PALTRANS' MADRAS-1. 30110

கவிமணியைக் கற்போம்!

சா. சண்முகபாண்டியன்

நாமேதான் நமக்குள்ள துணைவன் ஆகும்
நம்காலில் நாம்நின்றால் நம்மைத் தேடித்
தாமாகப் பொன்பொருள்கள் வந்து சேரும்
தாழ்த்துவதும் உயர்த்துவதும் நாமே என்று
தேமதுரத் தமிழாலே பாடிச் சென்றார்
தேசிகன்என் னும்கவிஞன்; தமிழின் சொத்து
பூமாது போட்டிருக்கும் கவிச் சரத்தில்
புதிதாக ஒளிர்கின்ற விளைந்த முத்து.

ஆசிரியப் பணிசெய்த அன்புத் தெய்வம்
அரும்கவிதை ஊற்றெடுக்கும் அறிவு மையம்
மாசுமனம் தீய்த்தழித்த பக்திச் செம்மல்
மனிதருக்குள் கனியாகா விளைந்த செந்நெல்
தேசத்தின் நலம்போற்றும் வாழ்வு செய்தோன்
தெளிவான வாழ்வாலே புகழும் கொய்தோன்
வாசமுள்ள 'மலர்மாலை' தொடுத்துத் தந்தோன்
வாழ்வையொரு கலையாக்கி மனம் மகிழ்ந்தோன்.

தேரூரில் பிறந்தமகன்; தமிழ்த் தொண்டாலே
தெய்வமென வாழ்ந்தகுகன்; புத்தேரிக் கோர்
பேர்தந்து சேர்ந்தஅணி; புலவ ருக்குள்
பெரும்புலமை பெற்றமணி; தமிழ கத்தின்
வேரான தாலாட்டு; சிறுவ ருக்காய்
விளைந்துவந்த தனிப்பாட்டு; கவிதை பாடிப்
பாரைவலம் வந்தசிட்டு; பிள்ளை, இந்தப்
பாரதத்தாய் நெற்றியிலே அமைந்த பொட்டு.

கடமைக்குத் தொழில் ஒன்றைச் செய்யவேண்டும்
கருத்துக்குக் கலையொன்றைக் கொள்ள வேண்டும்
உடைமையெனப் பொதுவுடைமைச் சிந்தை வேண்டும்
உடனிருப்போர் உயர்வதற்கே உழைக்க வேண்டும்
தடம்மாறிப் போகாமல் வாழ வேண்டும்
தான்வாழும் நாடுமொழி போற்ற வேண்டும்
இடமாகப் பெரும்புகழைப் பெறுதல் வேண்டும்
இவைகள்நாம் கவிமணியில் கற்கும் பாடம்.

With best compliments from

Messrs. A. Abdul Shukoor & Co.,

"Habib Mansions"

35, Broadway,

Madras-1.

18082

கவிதைக் குருவி

மு. சுப. கரு.

பட்டுடலங் கொண்டசிட்டுக் குருவி—உன்
பாட்டினிமை; குற்ருலத்தின் அருவி—அதைப்
பரிந்து கேட்க நானிருக்க
எட்ட எட்டப் பறப்பதும்நீ ஏனோ?—உன்
இலட்சியமும் நீலவானந் தானே?

கூடுகட்டி ஊஞ்சல்போல ஆடிக்—காலைக்
குரல்கொடுத்து நாளுமிரை தேடிச்—சிறு
குஞ்சுக் கூட்டும் கடமைகண்டும்
வீடு மனை மக்களோடும் வாழ்ந்து—எந்த
விதமுமிங்கு செய்வதில்லைத் தாழ்ந்து!

கட்டழகுத் துணைவியோடு சேர்ந்து—தென்
காற்றினிலே சிறகுகளை ஆர்ந்து—உன்
காலமெல்லாம் இன்பம் ஆள
தாவிப் பறந்து செல்ல—ஒரு
தத்துவத்தைத் தரவென்னப் பிணக்கு?

காடுமலைக் கழனிகுளஞ்சாலை—இளங்
காதலுளந் தூதுவிடுஞ் சோலை—மணல்
மேடுபுனல் ஓடுநதி எங்கும்
நீடும் இயற் வண்ணமொடு ஒன்றும்—உன்
நினைவு வரும் இனிமைதரும் என்றும்!

இராஜேஸ்வரி அண் கோ.,

பாத்திரக் கடை, **காரைக்குடி-1.**

தோற்றம்: 1941 **போன்: 239**

தங்கள் தேவைகளுக்கு வேண்டிய எல்லாவிதமான பித்தளை, தாமிர பாத்திரங்களுக்கும் எங்களிடம் தொடர்பு கொள்க.

நம்பிக்கை, நாணயம், கைராசியுள்ள ஸ்தாபனம்

இராஜேஸ்வரி அண் கோ,
பாத்திரக் கடை
காரைக்குடி - 1.

அனைவருக்கும் எமது உளங்கனிந்த

தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

மீனாட்சி பதிப்பகம்

(புத்தகம் வெளியிடுவோர், விற்பனையாளர்)

4142, கீழ இராச வீதி **புதுக்கோட்டை.**

With best compliments from

Grams :
LEDGER

Phone { Paper: 25211
Ink : 21384
Resi. : 25021

Palaniappa & Co.,

Paper, Boards & Printing Inks etc.

P. B. No. 179

2/53, Anderson Street,

Madras-1.

With best compliments from

Ensign Electricals

8, Conran Smith Road,

Madras-6.

With best compliments from

Messrs. S. R. P. TOOLS LIMITED,

LATTICE BRIDGE,

MADRAS-41.

Manufacturers of

Metal Cutting Tools

HERCULES,

PHILLIPS,

B. S. A.

THREE WORLD RENOWNED BICYCLES

Made in India by

T. I. Cycles of India,

Ambatur, Madras-53.

Proprietors:

Tube Investments of India Ltd

Madras-1

With best compliments from

ASIAN
TRAVELS
(INDIA)
PRIVATE
LIMITED

"VICTORY HOUSE",

7/8, MOUNT ROAD,

MADRAS-2.

With compliments

Telephone : 32612

M/s. BHARATH SKINS CORPORATION,

10-B, Vepery High Road,
Periamet,
Madras-3.

With best compliments of:

M/s. Lakshmi Leather Corporation,

7, Sami Mudali Street,

Periamet, Madras-3.

Telegrams: ZIPFASTNER   Phone: 33472

Lakshmanan Chettiar & Co.,

Dealers in Finished Leather, Leather Goods

and Boot Materials

Tannery at

Chromepet

Phone: 89605

Office

554, Poonamallee High Road

Periamet, Madras-3

With best compliments from

Messrs. Jeevandas Laljee & Son,

207, Govindappa Naick Street,

Madras-I.

Phone: 31341

With the best compliments

Raitan Private Limited,

44, Vepery High Road,

MADRAS-3

With best compliments from :

Handymen
Industries
Private
Limited,

Chromepet,
Madras-44.

செயலர்கள்



வெ. ச திருப்பதி
(1972)



மு. தேனப்பன்
(1973)

மன்றப் பணி ஏற்ற செயலர்கள்



சொ. தேனப்பன்
(1958—1968)



மு. சுப. கருப்பையா
(1969)



மு. பழநியப்பன்
(1970)



அழ. குமரப்பன் B. A.
(1971)

கவிமணி மன்ற நிர்வாகக் குழு 1972

செயலர் : திரு. வெ. ச, திருப்பதி

துணைச் செயலர் :

திரு. மு. தேனப்பன்

உறுப்பினர்கள் :

திரு. சித. அடைக்கப்பன்
,, மு. அடைக்கலவன்
,, கரு. அண்ணுமலை
,, கரு. அழகப்பன்
,, மா. அழகப்பன்
,, மு. அழகப்பன்
,, லெ. அழகப்பன்
,, சொ. அழகப்பன்
,, வெ. நா. சுப. அழகப்பன்
,, ஆ. சொ. சித. அழகப்பன்
,, மு. ப. அருணுசலம்
,, சொ. அருணுசலம்
,, கரு. இராசேந்திரன்
,, ஜெ. இராமனுதன்
,, சொ. இராமலிங்கம்
,, கரு. கணேசன்
,, ராம. கருப்பையா
,, சொ. கருப்பையா
,, மு. கருப்பையா
,, மு. சுப. கருப்பையா
,, மு. கிருஷ்ணப்பன்
,, கி. சு. கிருஷ்ணப்பன்
,, அழ. குமரப்பன்
,, கரு. குமரப்பன்
,, கரு. க. குமரப்பன்
,, சொ. சம்பந்தம்
,, ஆ. வயி. சண்முகம்
,, கரு. சிங்காரம்
,, அழ. சிதம்பரம்
,, சொ. சிதம்பரம்
,, தே. சிதம்பரம் செட்டியார்
,, மு. சிதம்பரம் செட்டியார்
,, சிவ. சிமு. சிதம்பரம் செட்டியார்
,, மு. சிவராமன்
,, கி. சீனிவாசன்செட்டியார்
,, மு. சுப்பையா

திரு. கரு. செல்வம்
,, அ. சொ. தே. சொக்கலிங்கம் செட்டியார்
,, அ. சொ. சித. சொக்கலிங்கம் செட்டியார்
,, சிவ. கரு. மு. சொக்கலிங்கம் செட்டியார்
,, அ, சுப. சொக்கலிங்கம்
,, மு. சொக்கலிங்கம்
,, அண. சொக்கலிங்கம்
,, அழ. சொக்கலிங்கம்
,, சித. திருநாவுக்கரசு
,, சே. தியாகராசன்
,, சொ. தியாகராசன்
,, கரு. தியாகராசன்
,, சொ. தேனப்பன்
,, சித. தேனப்பன்
,, சொ. நாகப்பன்
,, பழ. மு. பழநியப்பன்
,, மு. பழநியப்பன்
,, சி. மு. பழநியப்பன்
,, சித. பழநியப்பன்
,, லெ. பழநியப்பன்
,, அ. கரு. பழநியப்பன்
,, வ. கரு. பழநியப்பன்
,, கரு. பழநியப்பன்
,, பெரி. சொ. பெரியண்ணன்
,, அழ. சித. முத்தையா
,, மா. முத்தையா
,, மு. நா. முத்தையா
,, மு. முத்தையா
,, ச. முத்துக்கருப்பன்
,, ச. முத்துபாலன்
,, மா. முருகப்பன்
,, சுப. முருகப்பன்
,, சி. மு. மாணிக்கம்
,, சி.கரு.பழ. லெட்சுமணன்
,, பெரி. லெ. வள்ளியப்பன்
,, ராம. வள்ளியப்பன்
,, அழ. ராம. வள்ளியப்பன்
,, லெ. கரு. வள்ளியப்பன்
,, லெ. வயிரவன்
,, சித. வீரப்பன்

பாலாஜி டாக்ஸி

51, மேலப்புலிவர் ரோடு,
திருச்சி-8.

புதிய டூரிஸ்ட் கார்கள்
குறைந்த வாடகைக்கு
கிடைக்கும்.

தேவைக்கு 7958 க்கு
போன் செய்யவும்.

"இதனை இவன் முடிப்பா
னென்றுய்ந்து
அதனை அவன் கண்விடல்"

படம் பிடிக்கும் பணியை எங்களிடம் கொடுங்கள்.

கெம்பு ஸ்டுடியோ.

P. புதுப்பட்டி புத்தூர்
திருச்சி மாவட்டம் திருச்சி-17.

திருவெறும்பூர்
திருச்சி-13.
போன் : 59

மாடர்ன் எலெக்ட்ரிக் ஸ்டோர்ஸ்

கல்லுக்கட்டி ரோடு
காரைக்குடி.

தங்களுக்கு வேண்டிய
எல்லாவித மினவிசிறி
களும், பிலிப்ஸ், ஆஸ்ரம்,
கிராம்டன் பல்புகளும்,
டியூப் லைட்டுகளும்

மற்றும்

எல்லாவித எலெக்ட்ரிக்
சாமான்களும், சகாயமான
விலையில் எங்களிடம்
கிடைக்கும்.

உரிமையாளர் :
SP. சுந்தரகேசரி M. A.

எங்களிடம் எல்லாவிதமான
புதிய சைக்கிள்களும் சைக்கிள்
சாமான்களும், டயர், டியூப்,
லைட் வகையருக்களும் மொத்த
மாகவும் சில்லறையாகவும்
கிடைக்கும்.

விஜயா சைக்கிள் ஸ்டோர்ஸ்

(M. D. C. C. பாங்க் அருகில்)
19, மார்கட் ரோடு,
சோழவந்தான்
மதுரை மாவட்டம்.

மன்றம் வாழ்க

கெம்பு. கணேசன்

எண்சீர் விருத்தம்

தூங்குபுலி துயில்கலைந்து எழுந்த பின்னே
        தும்பைநிறச் சிறுமுயல்கள் உயிர்ப்பதேது?
வீங்குதோள் தமிழர்படை அணிவகுப்பின்
        வேறுமொழி பொன்மகுடம் சூடல்உண்டோ?
ஈங்குகவி மணிமன்றம் தோற்றத்தாலே
        இன்பத்தமிழ் வாழுமன்றோ? மலருக்குள்ளே
தேங்குதேன் சுவையுண்டு!! முல்லைக்காடு
        தென்றல்பட அசைகின்ற மணமும்உண்டு

பதினான்காம் ஆண்டுதனைக் கண்டுவிட்ட
        பாய்வெள்ளம் நிகர்த்தஎழில் மன்றத்தார்க்கு
அதிகமான் அவ்வைக்குத் தந்த அந்த
        அருங்கனிகள் கிட்டின்நான் தருவேன் ஆனால்
அதுகிடைக்காக் காரணத்தால் கவிதைதந்தேன்
        ஆயிரமாண் டிந்தநல் மன்றம் வாழ்க!!
கொதிமண்ணை ஆற்றவரும் நிலவைப்போலக்
        குளிர்த்தோட்டத் தமிழ்காத்து வாழ்க!! வாழ்க"

எதிர்ப்படையை வெல்வதற்குக் கதிர்போல் மின்ன
        எறிவேலைப் புதுப்பிப்பீர்!! துருவாள் தன்னைக்
கொதிஉலையில் கனல்பாய்ச்சிக் கூர்படுத்திக்
        குவித்திடுவீர் இளைஞர்படை!! வேங்கை நெஞ்சில்
மிதிக்கின்ற தமிழரணி கவிதை நெய்க!!
        மெருகிடுவீர் பொன்னுக்கு!! அயலார் நாட்டில்
மெதுதென்றல் தமிழ்நுழைய ஆக்கம் செய்வீர்
        வெல்லத்தமிழ் காக்கும்இம் மன்றம் வாழ்க!!

சுத்தமான சலவைக்கு

சுந்தரம் பார் சோப்

மேனி எழிலுக்கு நறுமணம் கமழும்

சுந்தரம் சாண்டல் சோப்

எப்போதும் கேட்டு வாங்கி பயனடையுங்கள்!

சுந்தரம் சோப் ஒர்க்ஸ்,

20, இஸ்மாயில்புரம் 11வது தெரு,

மதுரை-9.

Phone No: 25998

Tel: CHIT FUND Phone: 681

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அண்ணாமலை பைனான்சிங் அண் சிட்பண்ட் கம்பெனி (P) லிட்,

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்

1060-61, மேல ராஜ வீதி

தஞ்சாவூர்.

நம் கடன்

மு. தவமணி

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற பெருமையோடு இயற்கையின் எல்லா நலன்களோடும் உலகம் அமைக்கப்பட்டது. காலத்தின் வளர்ச்சியில் மனிதன் மட்டும் விலங்கு நிலையிலிருந்து பேசவும் எழுதவும் சிந்தித்து செயல்படவும் ஆற்றல் பெற்றான். விஞ்ஞான வளர்ச்சியால் இருந்த இடம் மாறாமல் கோள்களில் விந்தைபல புரிந்து நன்மை காணவும் முற்பட்டுவிட்டான் வாழ்க்கைக்குத் தேவையான எல்லா வசதிகளையும் பெருக்கிக்கொண்டு விரும்பியபடி சுகம் பெற படாத பாடெல்லாம் படுகிறான். சிலருக்கு எண்ணியபடி வாய்ப்புக் கிடைக்க பொருள் ஈட்டி குவித்து மகிழ்கிறார்கள். ஆனால் கொஞ்சி மகிழ மக்கள் இல்லை. பலருக்கு மனம் போன்ற மனையாளும் மக்களும் கிடைக்கிறார்கள் பொருள் கிடைக்கவில்லை. எல்லாத் துறையிலும் ஆராய்ந்த அறிவும் பயன் நிறைந்த அனுபவமும் இருக்கும் சிலருக்கு முன்னேற வாய்ப்புக் கிடைப்பதில்லை. முன்னேற்றத்திற்கான வாய்ப்பும் உதவிக்கு நட்பும் நிறைய இருக்கும் பலருக்கு வழி தெரிவதில்லை. செல்வம் நிறைந்தோரும் வறுமையால் நலிவுற்றோரும்; நலம் பெற்றோரும் நோயுற்றோரும்; குழந்தையும் பெரியவரும் அறிவுடையோரும் இல்லாதாரும் இப்படி வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் சிக்குண்டு அமைதி இழந்து வாழ்ந்து வருகிறோம். ஏன் என்று கேட்டால் அவ்வளவுதான் விதி என்று சொல்லி முற்றுப் புள்ளி வைத்து விடுகிறோம்.

வாழ்க்கை என்பது இவ்வளவு தானா. விதிதான் முடிவான வழி காட்டியா? அதன் வழிதான் இன்பம் துன்பம் விடுதலை எல்லாமா மேலெழுந்த வாரியாக நோக்கிப் பார்ப்போம். வினையை விதி என்கிறோம். நல்வினை தீவினை என்று பிரித்து நன்மை வரும்போது நல்வினை என்றும் கெடுதல் நேரும் போது தீவினை என்றும் கூறுகிறோம். அதை வெல்லமுடியாதென்று சில சமயம் சோர்ந்து போய் வாழ்க்கை அடியோடு முறியடிக்கப்பட்டு விடுகிறோம். நேராக நோக்கும் போது முன் தொடர்ச்சியே விதி என்பது நன்கு புலப்படும். நேற்று நிகழ்த்திய தவறை இன்று மாற்றிக்கொள்ள முடியும் என்பது போல் முன் வினைத் தொடர்பை இன்று மாற்றிக் கொள்ள முடியும். நேற்று செய்த தவறின் பலனை இன்று அனுபவித்தாலும், இன்று செய்யும் நன்மையின் பலனை நாளை நிச்சயம் அனுபவித்தே தீருவோம். இது மாற்ற முடியாத நியதி. எனவே மனிதன் விரும்பியபடி வாழ நிச்சயம் வாய்ப்பு இருக்கிறது. எண்ணியர் எண்ணி யாங்கு எய்துவர் என்பது வள்ளுவன் வாக்கு. எனவே வினை எப்படி இருந்தாலும் சோர்வு இல்லாமல் முயற்சி மேற்கொண்டு செயலில் ஈடுபட்டால் மேம்பட்ட வாழ்க்கை வாழலாம். கிடைத்த வாழ்வை சீராக்கிக் கொண்டு பயன் நிறைந்த நன்மையை நாளும் இயன்ற அளவு செய்து வாழ்ந்தால் பிறப்புக்கு முடிவுகட்டி வானுறையும் உலகில் தெய்வமாய் வாழலாம். இதற்கு முதலும் முடிவும் மனம் தான் காரணம். அதில் தெய்வீகத்தை நிறைத்து வைத்துக் கொண்டால் தீமை அணுகாது. நன்மை விலகாது. அமைதியும் இன்பமும் நிரந்தரமாய் இடம் பெறும். அதற்கான வழிதனை அறிந்து வாழ்வதே நமது கடமை.

பழநியப்பா அன் கோ

கீழச்சிவல்பட்டி

எங்களிடம் எல்லா வகையான பீடி, சுருட்டு, சிகரெட், சோப் ரொட்டி, மிட்டாய் வகைகள் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

உரிமையாளர்;

சுப. பழநியப்பன்

வெங்கடேஸ்வரா ஏஜென்சீஸ்

12, பேச்சியம்மன் ரோடு,

மதுரை-1.

டீலர்ஸ் :

வெல்டிங் ராடுகள்

வெல்டிங் சாமான்கள்

வைண்டிங் வயர்கள்

Sincere Tourist Taxi

at

Mathurai

Ringup

30810

24 Hours Service.

P. B. No. 26 Phone: 22419

Rajamani Stores

78, Town Hall Road,

MADURAI-1.

(Opp: New College House)

Visit Rajamani Stores.

for Shoes, Chappals and suit cases.

Service is our motto.

கவிமணியும் மழலைமொழியும்

M. R. சங்கிலி

ஆசிரியர் இராங்கியம்

தோன்றிற் புகழொடு தோன்றுக என்ருர் தெய்வப் புலவர் திருவள்ளுவர். அத்தகு சிறப்புப் பெற்ற பலருள் நமது கவிமணி அவர்களும் ஒருவராவார். தமிழின் அமுதமாய், இசையின் வடிவமாய் இயற்கையின் இன்பமாய், கவிதைத் தென்றலாய் விளங்கியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். அவர்களது தமிழ்ப் பற்றும், இறைப்பற்றும் சொல்லும் தரமன்று, அவரின் கவிதைகள் தமிழிலக்கிய உலகில் ஒரு புத்துணர்ச்சியையும், புதிய விழிப்பையும் ஏற்படுத்தின என்ருல் அது மிகையாகாது. மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், ஆசிய ஜோதி உமார் கய்யாம் பாடல்கள், தே. வி. யின் (தேசிக விநாயகம் பிள்ளை) கீர்த்தனங்கள், கவிமணியின் உரை மணிகள், குழந்தைச் செல்வம் போன்ற நூல்கள் கவிமணி அவர்களால் இயற்றப்பட்டதாகும். அவை ஒவ்வொன்றும் ஒரு தேன் குடம் பொன்போல் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய நூல்கள்.

கவிமணி அவர்கள் பல்நோக்கும் தொல்நோக்கும் கொண்டவர் அவரது கவிதைகள் அறிவுச் சோலையிலே மலர்ந்த அழகுப் பூக்கள். அந்தப் பூக்களை முகர்ந்து பார்த்த மாத்திரத்திலேயே நம் அறியாமை விலகி அறிவு நம்மைத் தேடிவரும்.

குழந்தைகளை விரும்பாதார் யார் உளர்? குழந்தைகளின் உலகமே தனி உலகம். மழலை மொழி பேசி நம்மை மகிழ்விக்கும் அந்தக் குழந்தைகளை இறைவனுக, பேசும் தெய்வமாக காண்பவர்கள் இந்த உலகில் ஏராளம்! ஏராளம்! கள்ளமில்லர் உள்ளம் நம் கவிமணியின் உள்ளம். அந்தக் கள்ளமற்ற உள்ளம் கொண்ட, குழந்தை மனம் கொண்ட நம் கவிமணி அவர்கள் குழந்தைகளுக்காக ஒரு கவிதைத் தொகுப்பைத் தந்திருக்கிருர். அதில் காணப்படும் மழலை மொழிகளை நாமும் சுவைத்து இன்புறுவோமே!

முத்தம்! குழந்தைகளின் முத்தம். இந்திரலோகம் என்று அழைக்கப்படும் அந்தத் தேவர் உலகத்தில் கிடைக்கும் அமிர்தம் இருக்கிறதே, அதைவிட எத்துணையோ அளவு உயர்ந்தது. குழந்தையைப் பார்த்து கவிமணி அவர்கள் கண்ணே, மணியே, கட்டிக் கரும்பே, வண்ணக் கிளியே, வாசக் கொழுந்தே, தேனே, பாலே, தெவிட்டாக் கனியே, மானே, மயிலே முத்தந்தா என்று கூறுகிருர். குழந்தையின் ஒரு முத்தத்தைப்பெற அவர் ஒரு கவிதையே தந்துவிடுகிருர். அவருக்குக் கிடைக்காத முத்தம் கிடைக்கிறது. நமக்குக் கிடைக்காத கவிதை கிடைக்கிறது.

பாங்க் ஆப் மதுரை லிமிடெட்

தலைமை அலுவலகம் மதுரை

தங்கள் சேமிப்பு மூலம் நாட்டின் உற்பத்திபெருகுகிறது மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

இன்றே பாங்க் ஆப் மதுரையில்

சேமிப்புக் கணக்கு ஆரம்பியுங்கள்.

சேமிப்புத் திட்டங்கள்

(1) சேமிப்புக் கணக்கு

(2) ரெகரீங் டிபாசிட்

(3) "தினசேமி"

(4) ரொக்கப் பத்திரங்கள் Cash certificates

(5) தவணை டிபாசிட்

எங்கள் வங்கியில் கணக்குத் திறப்பதால் தாங்கள் அடையும் 4 நன்மைகள்

(i) தவணை டிபாசிட்டுகளுக்கு வேண்டுகோளின்பேரில் மாதாந்திர வட்டி கொடுக்கப்படுகிறது.

(ii) டிபாசிட்டுகளுக்கு கிடைக்கும் வட்டி வருமானத்திற்கு ரூ. 3000/—வரை வருமான வரி விலக்கு உண்டு.

(iii) ரூபாய் 1,50,000/- உள்ள டிபாசிட்டுகளுக்கு சொத்து வரி விலக்கு உண்டு.

(iv) பள்ளி, அற நிலையம் போன்ற நிறுவனங்களுக்கு ½0/0 வட்டி கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது.

தென்னகத்தே மக்கள் சேவையில் 110 கிளைகள்

சிறப்பு அம்சம் :—

தமிழகத்தில் சிட்பண்டு தொழில் நடத்தி வரும் முதல் வங்கி

'பாங்க் ஆப் மதுரா லிட்.'

தாலாட்டு! தாலாட்டுப் பாட்டு கேட்காத குழந்தை ஒன்று இந்த உலகில் இருக்க முடியுமா? மொழி, இனம், மதம் வேறுபாடு இருக்கலாம். ஆனல் தாயினல் பாடப்படும். தன் குழந்தையின் நினைப்பில். இன்ப உணர்ச்சியில் பாடப்படும் எல்லாத் தாலாட்டுப் பாடல்களும் ஒரே உணர்ச்சியைத் தானே காட்டும்! நமது கவிமணி அவர்கள் தாயைப் போன்றவர் கள். அன்பிற் சிறந்தவள் தாய். அந்தத் தாயைப் போன்று நம் கவிமணி அவர்கள்தாலாட்டுகிருர்.

அவரது தாலாட்டிலே பொன் னும், மணியும் புரண்டு வருகின் றன. மலர்கள் மகிழ்ந்து வரு கின்றன. கனிகள் கனிந்து வரு கின்றன. அமிர்தம் அருவியென வருகிறது. தமிழைக் கூப்பிடு கிருர். தரணியாளும் மன்னர் களைக் கூப்பிடுகிருர். புலவர் களைக் கூப்பிடுகிருர். அண்டங் களையெல்லாம் ஆட்டிப் படைக் கும் இறைவனைக் கூப்பிடுகிருர். பாடலைப் படிக்கும் பொழுதே நம்மை அறியாமல் நமக்குத் தூக்கம் வந்து விடுகிறது.

சரி. உறக்கத்திற்கு மட்டும் தானு பாட்டு. உறங்கி விழிப்பதற் கும் பாட்டு. "எல்லே இளங் கிளியே இன்னும் உறங்குதியோ" என்று ஆண்டாள் தன் தோழியர் களை உறக்கத்திலிருந்து எழுப்பி யது போல், குழந்தைத் தெய்வங் களை உறக்கத்திலிருந்து எழுப்புவ தற்கும் கவிதை தருகிருர் நம் கவி மணி அவர்கள்.

விழிப்பை ஏற்படுத்தும்பொழுது கூட, இனிமையாக கனிவாக அன் போடு அப்பா, அரசே என்று அழைக்கிருர். காகம் பறப்பதும், கதிரவன் உதிப்பதும், ரோஜாவின் மணமும், வட்டமிடும் வண்டும், கறவைப் பசுவும், கன்றும் கவிதை யிலே வருகின்றன. எழுப்பிய குழந் தையிடம் இனிமொழி பேசி, இருளை போக்கி ஒளி நல்க வந்த ஆதவ னின் உதயத்தையும், காலை பொழுதில் புல்லில் காணப்படும் வெண் பனித் துளியையும்; பூமலர் வதையும், கோழி கூவுவதையும், காகம் கரைவதையும் காட்டி வாராய், வந்து நீ பாராய் இந்தக் காலைக் காட்சிதனை என்று கவிதை யிலே அழைக்கிருர் குழந்தையை நம் கவிமணி அவர்கள்.

இவை மட்டும்தானு? காகமும் கோழியும், நாயும், கிளியும், பசு வும் கன்றும் மழலை மொழி பேசு கின்றன மன்னன் கவிமணியின் கவிதையிலே! குழந்தை விளை யாட வேண்டாமா? அதற்கு வேடிக்கைக் கதை வேண்டுமே! கதை வருகிறது கவிதையிலே, பொம்மைக் கலியாணம். எலிக் கலி யாணம்.

பச்சைக் 'குழந்தை பேசுவது போல பைந்தமிழ் பேசுகிருர் நம் கவிஞர். மழலை மொழி சிந்தும் மாகவியின் கவிதைகள் நம்மையும் மழலை பேசும் குழந்தைகளாக்கி விடுகின்றன. நாம் குழந்தையாக மாறும்பொழுது நம் கவிஞர் நமக் குத் தாயாகி விடுகிருர். 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' என்ற மொழிக்கேற்ப நம் கவிஞர் பெருமான் கவிமணி தேசிக விநா யகம் பிள்ளை அவர்கள் இன்று நம் உள்ளம் எனும் கோவிலிலே கொலு வீற்றிருக்கிருர்.

பூவிலுள்ள தேனை நாடிச் செல் லும் வண்டைப் போல, கனியை நாடிச் செல்லும் பறவையைப் போல, இனிப்பை நாடிச் செல்லும் எறும்பைப் போல கவிமணி அவர்களின் கவிதைகள் காணக் கிடைக்கும் இடங்களை அவரது புகழ் பேசப்படும் இடங் களை நாடி, தேடி, ஓடிச் சென்று நாம் பயனடைய வேண்டும்.

தரத்தில் சிறந்தவை!
உழைப்பில் உயர்ந்தவை!!
கெட்டியான சாயம்!!!
PALAYAKAT COY. PVT. LTD. MADRAS MADRAS
REGD. TRADE MARK
80s x 80s
எங்கள்
சங்கு
மார்க்
லுங்கிகள்
தி மதராஸ் பளயகாட் கம்பெனி பிரைவேட் லிட்.
"சங்கு நிலையம்", 31, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1
கிளை: 57, ரவீந்திரசாரணி, கல்கத்தா-1

கவிமணியும் கவிதைகளும்

அழ. குமரப்பன் B. A.

முன்னுரை :

"தோன்றின் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்ருமை
நன்று" (குறள்-236)

—என்ற நம்மினிய வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, மக்கள் சமுதாயத்தில் தோன்றுவோர் மிகச் சிலரே ஆவர்; ஆம்......ஒரு குளிர்ந்த பொய்கையில் எங்கும் பசுமை படர்ந்து வீற்றிருக்க எங்கோ ஒன்றிரண்டு-செந்நிற இதழ் கொண்ட சில தாமரை மலரைப் பார்க்கின்ருேம். அதைப் போன்றுதான் இந்த சமுதாயத்திலும் சாலச்சிறந்த அறிஞர் சிலரைக் காண்கிருேம். அவருள்ளும் ஒருமாமணி — கவிமணி; அன்னுரைப் பற்றிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நம் கவிமணி அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த தேரூரில் 1876-ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 14-ம் ஆயில்ய நாளில், சீரிய நோக்கங் கொண்ட சிவதாணுப் பிள்ளை அவர்கட்கும், அரிய பண்புகள் பல பெற்ற ஆதிலட்சுமி அம்மாவுக்கும் அருந்தவப் பிள்ளையாக வந்தவதரித்தார்கள். பள்ளிக்குச் செல்லும் பருவம் வந்ததும் அவ்வூரிலுள்ள தொடக்கப் பள்ளிக்கு அனுப்பப்பட்டு, கல்வி கற்கத் தொடங்கினுர்கள். நாஞ்சினுட்டு மக்கள் தம் தாய்மொழியைக்கூட கற்பதற்கு வகையற்றிருந்த காலம் அது; எனவே முதலில் மலையாளமே கற்க வேண்டியவரானுர். அதன் பின்னர் கோட்டாற்றில் ஆங்கிலக் கல்வியும், திருவனந்தபுரத்தில் ஆசிரியர் பயிற்சியும் கற்றுத் தேர்ந்தார்;

என்ருலும், தேனில்லாப் பால் தித்திக்காது என்பது போல, தமிழ் இல்லாக் கல்வி அன்னுருக்குச் சாலச் சிறக்கவில்லை. அச்சமயத்தில், தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும், சமயத்துறைகளிலும் பேரறிவு வாய்க்கப் பெற்றிருந்ததோடு, வாணந்திட்டு மடத்திற்கும் தலைவராய் விளங்கிய சர்ந்தலிங்கத் தம்பிரான் என்பவரின் உயரிய துணை கிடைக்கப்பெற்று, தமிழ் கல்வியை நம் கவிமணி அவர்கள் கற்றுத் தேர்ந்தார்கள். அக்காலையில் திருநெல்வேலி மடத்தைச் சார்ந்த உமையொருபாங்கன் குருக்கள் கோட்டாற்றுக்கு வந்தார். அவரிடம் நம் கவிமணி அவர்கள் சிவதீட்சை பெற்றுக் கொண்டார்கள். தமக்கு ஞான ஒளி அளித்த அத்தேசிகரைப் புகழ்ந்து,

"வேறு மொரு துணையான்
வேண்டுவனே வேணுவனம்
தேறுமுறை யோர்பாகத்
தேசிகனே!—கூறுமெனக்
கெய்யாப் பிறவி
யிருளகல நீயளித்த
பொய்யா விளக்கிருக்கும்
போது"

—என்று மனமகிழ்ந்து பாடினுர்கள். அவ்விளம் பருவத்திலே

With best compliments from

R. Y. GAITONDE & CO.,

10B/1, Vepery High Road,

MADRAS-3.

Telephone : 39595
36486

With best compliments from

Ninans' Catering Services

Y. M. C. A. Buildings

ESPLANADE

MADRAS-1.

Phone : 21269 *Res. :* 72797

கவிதைபுனையும் ஆற்றலும், கற்பனைத் திறனும், செந்தமிழ் அறிவும் பக்திப் பெருக்கும் மிகுந்திருந்தது. அப்பாடல்கள் அனைத்தும் தாயுமானூர் பாடலின் போக்கையும். திருவாசகத்தின் இனிமையையும் திருவருட்பாவின் கனிவையும், கம்பரின் கற்பனையையும் கொண்டு மிளிரகின்றன.

அடுத்து அன்னூர், தமது 25-வது வயதில். நாகர்கோவிலை அடுத்த புத்தேரியில பிறந்தவரும், குணநலனகள் பல பெற்றவருமான உமையம்மை என்பாரை மணம் புரிந்துகொண்டார். வாழ்க்கைப் பாதையை வகுத்தமைகக வருவாயும் வேண்டுமன்ரூே! எனவே முதலில் தொடக்கப் பள்ளியில் வேலையில் அமர்ந்தும், அடுத்து கோட்டாறு ஆசிரியர் பயறசிப் பள்ளியில் பணிபுரிந்தும், அதன் பின்னர் திருவனந்தபுரம் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும் பணிபுரிந்து வந்தார். அதற்குள் அன்னூரின் தமிழ்ப் புலமையை அறிந்த அரசியலார் அங்கேயுள்ள 'மகாராஜா பெண்கள் உயர்நிலைப் பள்ளியால் தமிழாசிரியர் பதவியை அளித்தனர். அம்மட்டோ...! அதன்பின் பெண்கள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் பதவியில் அமர்த்தப்பட்டு, சிறந்த பணியாற்றலானூர்கள்.

நம் கவிமணி அவர்கள் இளஞ்சிரூர்களின் இதயக் கமலங்களிலே தம் கவிதைகளை அள்ளிச் சொரிவதிலே ஈடுஇணையற்றவர்கள்; அன்னூரின் கவிதை தித்திக்கும் தேனமுது; தெவிட்டாத இனப வாற்று.

'குதிரையின் புலம்பல்'—என்னும் பாட்டு, நமக்கு ஏவல் செய்யும் உயிர்களுக்கு நம்மை அறியாமலே இழைக்கன்ற கொடுமைகளை எடுத்துக் காட்டி, கன்னெஞ்சையும் கரைத்து இரக்க வுணர்ச்சியை எழுப்ப வல்லதாயுள்ளது. கிடைத்த உணவைப் பிறர்க்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணவேண்டும் என்னும் உண்மையை, 'அப்பம் திருடின எலியும்', கள்ள வழியினில செல்பவரை இயமன் காலடிப் பற்றி தொடர்வான் என்னும் உண்மையை 'நெற்பானையும் எலியும்' நமக்குத் தருகின்றன.

அன்னூரின் பக்திச் சுவையின் உயர்நிலையை விளக்கி நிற்பது, 'அன்பின் வெற்றி'—என்னும் தொடர்நிலையாகும். அடுத்து, 'கருணைக் கடலை'யோ ஒரு தனிக் காவியம் என்றே கூறல் வேண்டும் தேசியக் கொடி, கதற் விற்பனை முதலியவை நாட்டுப் பற்றையூட்டும் நற்ருெண்டு செய்பவையாயுள்ளன. இவைபோலப் பல்வேறு துறைகளில் அமைந்த பாடல்கள் இன்னும் பல; எண்ணில் அவை எண்ணில் அடங்கா.

இம்மட்டோ...? திருவனந்தபுரத்தில பண்டித முத்துசுவாமிப் பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்ட, 'தமிழன்'—என்ற பெயரில வெளிவந்த திங்களிதழல் நம் கவிமணி அவர்களின் கட்டுரைகள் பாடப் பகுதிகளாக வந்து கொண்டிருந்தன. 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' என்ற தலைப்பில் வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றுள் ஒரு காட்சி (அரசியற் படலம்)

"அரிசியை நிதமும் அளந்து
வைப்பாள்

நல்ல மிளகை நறுக்கி வைப்பாள்

கொல்ல மிளகை குறுக்கி
வைப்பாள்

உப்பில் புளியை உருட்டி
வைப்பாள்

With best compliments from

C. NARAYAN PILLAY & CO.,

(Furniture Hirers)

316, Pycrofts Road

MADRAS-14.

Phone : 85253

With the best compliments

Messrs. **Kadappa Chettiar & Co.,**

66, Malayaperumal Street,

MADRAS-1.

PHONE: 24896

கறிக்குத் தேங்காய் கருக்கி
வைப்பாள்
கடுகையும் எண்ணிக் கணக்கிட்டு
வைப்பாள்''

—என்று, சில மாமியாரின் கொடுமைகளை நமக்குக் காட்டுகின்றார்.

1895 முதல் 1931 வரை, தொடர்ந்து 36-ஆண்டுகள் பணிகள் பல செய்து வெற்றிகண்ட நம் கவிமணி அவர்கள் அதன்பின் ஓய்வு பெற்றார்கள். அதுமுதல் இயற்கை அழகும் அமைதியும் நிறைந்த சிற்றூராகிய புத்தேரியிலே வதிந்து வந்தார்கள். இது காரணமாக அன்னாரை 'புத்தேரிக் கவிஞர்' என்று அழைக்கப்—படுகிறார்.

புத்தேரியாகிய பெரிய குளத்திலே மலர்கிற தாமரைப் பூக்களைப் போல, நம் கவிமணி அவர்களின் இதயத் தடாகத்தில் மலர்ந்த கவிதைத் தாமரைகளை 'மலரும் மாலை'யுமாகத் தொடுத்துத் தமிழ் அன்னைக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

பாரசீகக் கவிஞரான 'உமர்க் கய்யாம்'—என்பார், அவர் மொழியில் எழுதியுள்ள கவிதைகளை இனிய தமிழில் நமக்குத் தந்தவர் நம் கவிமணி ஆவார்கள்.

இப்படியாக அன்னாரின் தமிழ்த் தொண்டு பெருக்கெடுத்துக் கொண்டிருந்த வேளையில், 'சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்' கவிஞரை முதற்கண் போற்றிய பெருமையைப் பெற்றுக் கொள்ளத் துணிந்தது. எனவே 24-12-40-ம் நாளன்று, 'சென்னை பச்சையப்பன் கல்லூரி'யில் நடந்த புலவர் பெருங்குழுவில், தலைவர் உமாமகேசுவரனார் அவர்களால் 'கவிமணி'—என்னும் பட்டம் சிறப்புற வழங்கப்பட்டது.

நம் கவிமணி அவர்களுடைய கவிதைகளில் ஆழ்ந்த தெளிவும், உணர்ச்சிச் சாயலும், சொல் இனிமையும், மிகுந்து காணப்படுகின்றன. மேலும் பழமையின் அமைதியும், புதுமையின் பொலிவும் அதில் கண்டு மகிழ்கிறோம். அன்னாரின் 'காந்தளூர்ச்சாலை'—பற்றிய ஆராய்ச்சியும், மற்றும் பல வரலாற்றுக் கட்டுரைகளும், கற்றோர்க்குப் பெரிதும் பயன்தரக் கூடிய அறிவுக் கருவூலங்களாக விளங்குகின்றன.

இப்படியாகப் பழகுவதற்கு எளிமையாகவும், அனைவர்க்கும் அன்பாகவும் விளங்கியவர் நம் கவிமணி அவர்கள். புதுமையிலே பற்றும், பழமையிலே பிடிப்புங் கொண்டு, ஆராய்ச்சிப் புலமையும் ஒருங்கே சேர்ந்து—ஓர் உருவமாகத் திகழ்ந்தவர்கள், 1954-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ம் நாளன்று நம்மையெல்லாம் துடிக்க விட்டு விண்ணுலகம் சென்று மறைந்தார்கள்.

முடிவுரை :

''நாமே நமக்குத் துணையானால்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்
சற்றும் இதற்கோர்
ஐயமுண்டோ?''

—என்று, அவர்கள் நமக்குச் சொல்லிச் சென்றிருக்கின்றார்கள். எனவே, இதுகாறும் கூறியவற்றிலிருந்து, அன்னாரின் சாலச் சிறந்த தன்மைகளையும், அவர் இயற்றிய கவிதைத் தேனையும் கண்டு—நாம் உண்டு மகிழ்ந்தோம். எனவே நம் கவிமணி அவர்களின் கவிதைகளை மனத்துள் பொன்போல் பொதிந்து, என்னென்றும் போற்றி மகிழ்வோமாக...!

With the best compliments of

G. RAMASWAMY & CO.,
GANGA TEXTILES

(Makers of Quality Yarns)

Post Box No. 1335,

COIMBATORE-18.

Grams: "GEARCO" Phone: 22397

G. VARADARAJ
Managing Partner.

With best compliments from



Alitalia

Italy's World Airline

150-A, Mount Road,

Madras-2.



கமலா தியேட்டர் திறப்புவிழாவில்
முதல்வர், சட்ட அமைச்சர், AL. S.,
V. N. சிதம்பரம், உரிமையாளர்.

18082

கிணற்றில் ஊற்றுப் பெருக
உயரிய முறையிலே போரிங் செய்ய
சிறந்த இடம் :

"விஸ்வம் போரிங் செட்ஸ்"

மின்சாரம் இல்லா இடங்களிலும் ஆயில் இன்ஜின்
மூலம் சிறந்த முறையில் குறைந்த செலவில்
போரிங் செய்து தரப்படும்

விபரங்களுக்கு

விஸ்வம் பவர் போரிங் செட்

உரிமையாளர் : மு. சுப. சுப்பையா செட்டியார்
கீழ்ச்சிவல்பட்டி
முகவை மாவட்டம்.

கவிமணி மன்றத்திற்கு வாழ்த்துக்கள்

★

N. M. அண்ணாமலை
உரிமையாளர் :

பாண்டியன் பேப்பர் கம்பெனி

சேலம் — செவ்வாய்பேட்டை — தர்மபுரி
(3701, 3901) (8780) (121)

NATION'S FIRST LAMP

Bengal

BENGAL ELECTRICALS CO.,

MADRAS-17. **BANGALORE-1.**

கவின் தமிழ் போற்றிய கவிமணியே வாழ்க!

வெ. பழநியப்பன்

உலகில் மணிகள் பல வகைப் படும். ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு சிறந்த பயனைச்செய்யும். இம் மணிகள் மணி மணியான செயல்களைச் செய்ய உதவுகின்றன. எடுத்துக்காட்டாக இரவில் தூங்கும் மாணவனை காலையில் எழுப்பி படித்து பரீட்சையில் தேர்வு பெற உதவுகிறது. மிதி வண்டியில் மணி இல்லையானால் சாலையில் செல்லும் மனிதனின் மேல் மோத நேரிடலாம். ஆலய மணி இறைவனை வழிபட வா என கூவி அழைக்கிறது. தமிழ் மொழியின் இலக்கிய வளர்ச்சிப்பணிக்கு ஏற்ற இலக்கணமாய் வாழ்ந்த மணியே "கவிமணி", அன்னார் புரட்சிக்கவி பாரதி தாசனாரும் தேசிய கவி நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்களும், சுத்தானந்த பாரதியாரும் வாழ்ந்த இக்காலத்தில் வாழ்ந்தவர் — பெரும் புகழ் அடைந்தவர். இளமை பருவத்திலேயே இயற்கை காட்சிகளை தம் உள்ளத்தில் உள்ள கருத்துக்களை தங்கு தடையின்றி சுதந்திர மனப்பான்மையுடன் எழுதி வந்தார். அவர் கவிதைக்கு அகராதி தேவையில்லை. அவர் குழந்தை உள்ளம் கொண்டவர்.

உள்ளத்துரை வேண்டுமெனில்
உள்ளம் தெளிய வேண்டுமப்பா
கள்ளங் கபடா காதப்பா
கருணை பெருக வேண்டுமப்பா!
அள்ளி உண்ணும் உணவுககா
அருமை கெடலா காதப்பா!
எள்ளத்தனையும் மரணபயம்
இல்லாதிருக்க வேண்டுமப்பா!

என்ற பாடலை ஒப்பினையாக வைத்து வாழ்ந்தவர். கவிமணியின் நினைவாற்றலை குறிப்பிட்டு புலப்படுத்துவது இங்கு பொருத்தமுடையதாம். பாடல் உரை நடையாயினும் ஓரிருமுறை அவர்பார்த்தாலே போதும். அவை அப்படியே அவர் உள்ளத்தில் பதிந்துவிடும்.

ஒரு நாள் கவிமணியும் நண்பர்களும் மடத்துக்கு வந்தனர். அன்று பேரம்பலவாணர் ஆலயத்தில் தழுகையாகிய பொங்கல், அப்பம், வடை, முதலிய குவியல் போல் குவிந்து இருந்தது. மடத்துக்கு வந்த சிறுவர் அனைவரையும் வரிசையாக அமரச் செய்தார் தம்பிரான். சிறுவர்கள் கண்கள் தின்பண்டங்களையே உற்று நோக்கிக் கொண்டிருந்தன. தம்பிரானே அதை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்காமல் திண்பட்டங்கள் அனைத்தையும் பெற இச்சிறுவர்களின் தகுதி யாருக்கு இருக்கிறது என்று சோதனை நடத்தப் போவதாக கூறினார். தாம் படிக்கும் தேவாரப் பாடலை ஒருமுறை சிறுவர்கள் கேட்க வேண்டும். அடுத்த முறை புத்தகத்தை படித்துப் பார்க்க வேண்டும். மூன்றும் முறை அப்பாடலை அப்படியே மனப்பாடமாகச் சொல்லவேண்டும். அப்படி

சிட்டி ஒயின்ஸ்

11-A, மதுரை ரோடு,

திருச்சி-8.

தரத்தில் சிறந்த AMRUT தயாரிப்பான டாலர், கிரேப், சில்வர்கப் பிராந்தி, ராயல் த்ரீ நைட் விஸ்கி, டிரை ஜின், XXX ரம்

முதலியவைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

போன் : 7416.

WITH BEST COMPLIMENTS

Palaniappa
Retreaders

TANJORE ROAD
TRICHY-8.

சொல்பவர்க்கே அப்பம், வடை, பொங்கல் முதலியன கொடுக்கப் படும் என்றார். சிறுவர்கள் முகத் திலோ ஏமாற்றம் கண்ணுக்கு எட்டியது வாய்க்கு எட்டாதோ எனக் கவலை வேறு. சிலர் ஏங்கி னர். பலர் தோல்வியுற்றனர். கவிமணி சோதனையில் ஈடுபட லாமா என தம்பிரானை கேட்டார், தம்பிரானும் சம்மதித்தார். தம்பிரான் கூறிய பாக்களை "கவி மணி" அப்படியே ஒப்புவித்தார். தின்பண்டங்கள் கூடையில் வைத்து கவிஞர் முன் கொடுக்கப் பட்டது. கவிஞர் எல்லா சிறுவர், சிறுமியர்களுக்கு கொடுத்து தாமும் உண்டு மகிழ்ந்தார் இதைப்போல் இன்னும் பல நிகழ்ச்சிகள் அன்னாரின் வாழ்க் கையில் நிகழ்ந்து இருக்கின்றன.

கவிதை என்பது என்ன? என்பது பற்றி கவிமணி அருமை யாக கவி தீட்டியுள்ளார்.

உள்ளத்துள்ளது கவிதை—
இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—
உண்மை
தெளிந்துரைப்பது கவிதை.

அவர் கூறும் கவிதை இலக் கணம், இன்பம், உண்மை, தெளிவு இம்மூன்றும் கலந்து பாடப்பெறும் பாடலே கவிதை என்பது கவிஞரின் கருத்து. கவிமணியின் மலரும் மாலையும், கவிமணியின் உரை மணிகள் ஆசிய ஜோதி, குழந்தைச் செல் வம், மருமக்கள் வழி மான்மியம் என்னும் நூல்களில் கவிஞர் தன் உள்ளக் கிளர்ச்சியையும் மக்க ளின் மனப்பக்குவத்தையும் எளிய முறையில் தீட்டியுள்ளார்.

கவிமணியின் பாடல்களில் புதுமையான முறைகளைக் காண லாம். பல்வேறு சந்தங்களைக் கொண்ட திருக்குறளைப்போல் இரண்டடிக் கவிதை பாடத் தொடங்கியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். கவி மணியின் பாடல்கள் எல்லாம் தற்கால கருத்துக்கு ஏற்றார் போல் பாடியிருக்கிறார். குழந்தை களுக்கான முதன் முதலில் எளிய நடைமுறையில் பாடல் இயற்றிய வர் கவிமணி ஆவார். இரசிக மணி டி. கே. சி. அவர்கள் பொன்னுரையே போதுமானது. "கவிமணியிடம் தேனையும்விட இனிமையான ஏதோ ஒரு பொருள் இருக்க வேண்டும். சொற்களை அதில் தோய்த்து தோய்த்து கவியாக அடுக்கியிருக் கிறார்கள்" என்று கூறியுள்ளார்.

கவிமணியைப்பற்றி செட்டி நாட்டு ராஜா எம். ஏ. முத்தையாச் செட்டியார் கூறுகையில் அண்ணா மலை பல்கலைக் கழகத்துக்கு கவி மணி ஆலோசனை கூறி உதவி புரிந்ததையும் தமிழர் ஒற்றுமைக் காக அவர் பாடுபட்டதையும் முத்தமிழுக்கு செய்தஈடு இணை யற்ற தொண்டு எனப் பாராட்டி னார். "சோமலெ" கவிமணியைப் பற்றி நினைத்த மாத்திரத்தில் கவிதை புனையும் ஆற்றல் பெற்ற வர் என்றும் தமிழ் மக்களின் மனத்தை வெகு விரைவில் கவர்ந் தவர் என்றும் கவிமணியின் பாடல்கள் பள்ளிப் பிள்ளைகளுக்கு பாடமாக வைக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார் கவிமணி யின் எளிய தோற்றத்தையும் அரிய பண்பாட்டையும் நாமக்கல் கவிஞர் நமக்கு கூறுகிறார்.

துரும்பென மெலிந்த தேகம்
துலங்கிடும் குளிர்ந்த பார்வை
இரும்பினும் வலிய உள்ளம்
இனியவே செய்யும் எண்ணம்
பரம்பொருள் நினைவே காட்டும்
பாரெலாம் பரந்த நோக்கம்
கரும்பினும் இனிய சொற்கள்
கவிமணி வடிவ மாகும்.

கவிமணி தம் இறவாக் கவிதை யரல் மறையாத மாமணியாகத் தமிழ் நாட்டில் என்றென்றும் தங்கி இருப்பார் என்பதில் ஐய மில்லை.

எஸ். பி. இன்டஸ்ட்ரீஸ்

அரியமங்கலம் (தொழிற்பேட்டை)

திருச்சி-10

விற்பனை நிலையம்:

எஸ். பி. இன்டஸ்ட்ரீஸ்

No. 5 பிஷப்ஹீபர் பில்டிங்ஸ்

சிங்காரத்தோப்பு,

திருச்சி-8.

பாலிதீன் பைகள், கவர், பைகள், திருமணத் தாம்பூலப்பைகள், பர்னிச்சர் கூடை ஒயர்கள்

தயாரிப்பாளர்கள்

கவிமணி மன்றத்துக்கு

எங்கள் வாழ்த்துகள்

வானதி பதிப்பகம்

தமிழில் தரமான புத்தகங்கள் வெளியிடுவோர்

82/11 பாண்டிபசார்—சென்னை-17

கவிமணியின் கவிதைகள்

(வித்வான் வை. சு. தண்டபாணி)

'உள்ளத்துள்ளது கவிதை—
இன்பம்
உருவெடுப்பது கவிதை,
தெள்ளத் தெளிந்த தமிழில்—
உண்மை
தெளிந்துரைப்பது கவிதை'

பழையநிலை

தமிழ்மொழி இலக்கிய இலக்கண வளமுடைய மொழி. நீண்ட நெடுங்காலத்தில் இருந்தே தமிழ் நாட்டில் கவிஞர்களும் புலவர்களும் கன்னித்தமிழைக் காத்து வருகின்றனர். சங்க காலம் முதல் இன்று வரை நம் நாட்டில் தோன்றிய கவிஞர்கள், புலவர்களின் எண்ணிக்கை எல்லையற்றது. மக்களின் திருந்திய வாழ்க்கைக்காக அவர்கள் இயற்றிய கவிதை நூல்கள் எண்ணற்றன. சங்க காலத்தில் தமிழ்நாட்டு மக்களின் மொழி அறிவுக்கு ஏற்ப புலமை மிக்க புலவர்கள் நல்ல தமிழில் கவிதைகள் இயற்றினர். பிற மொழிக் கலப்பு அதிகம் இல்லாத அக்காலத்தில் மொழியறிவு சான்ற அக்கால மக்கள், (இக்கால மக்களால் எளிதில் பொருள் விளக்கிக் கொள்ள முடியாத அக்கவிதைகளை நன்கு அறிந்து போற்றினர்) காலம் மாறியது. அந்நிய நாட்டினர் பலர் நம் நாட்டிற்கு வந்தனர். அவர்கள் பேசிய மொழிகள் நம் மொழியோடு கலந்தன. அத்துடன் அந்நியர் ஆட்சியும் புகுந்தது. நம் நாட்டு மக்களின் தாய்மொழி அறிவும் குறைந்தது. பழந்தமிழ் மக்களுக்கு எளிதாக இருந்த கவிதைகள் இக்கால மக்களுக்கு பொருள் விளங்காதனவாக ஆயின. ஆனாலும் புலவர்களும், கவிஞர்களும் பழங்காலக் கவிதைகளைப் போலவே கவிதைகள் எழுதினர். இக்கால மக்களின் மொழியறிவு, என்ன காரணத்தாலோ அவர்களுடைய அறிவுக் கண்களுக்குத் தெரியாது போயிற்று! கவிதை நூல்களுக்கு உரை எழுத வந்தபொழுது கூட கடினமான நடையிலேயே அதை எழுதினர். பிறர்க்குப் பொருள் விளங்காத நிலையில் எழுதுவது தான் சிறந்த உரைநடை என்றும் சிறந்த கவிதை என்றும் எண்ணினர். மக்களின் நிலையறிந்து எழுதப்படாத அவை கற்றோர்க்கே பயன்பட்டன.

காலம் மாறியது

மக்களின் நிலையறிந்து சுவையறிந்து எழுதப்பட்டால் தான் அவை மக்களுக்குப் பயன்படும் என்பதை திரு. வி. க. போன்றவர்கள் உணர்ந்தனர். பாரதியாரும் எளிய இனிய கவிதைகள் பலவற்றை எழுதி மக்களின் நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றையும் தூண்டினார். எளிய கவிதைகட்கு வழிகாட்டியாக அமைந்தவர் பாரதியாரே என்று கூறலாம். அதே போல எளிய உரை நடையை எழுதிக்காட்டியவர் திரு. வி. கல்யாணசுந்தரனாரே என்றும் கூறலாம்

பாரதியாரும் கவிமணியும்

பாரதியாரைப் பின்பற்றி பல கவிஞர்கள் தோன்றினர். அவர்

எங்களிடம் பேப்பர், கார்டு போர்டு ரகங்கள்
ஸ்கூல் நோட்புக்ஸ், பைல்ஸ், ரெடிமேட்
பில்புக்ஸ், சிலேட், பென்சில் கவர், கார்டு
தினுசுகள், மொத்தமாகவும்,
சில்லரையர்கவும் கிடைக்கும்.

Phone : 24478 Res : 25474
31666

கலைமகள்
அக்கவுண்ட் புக்ஷாப்

பேப்பர் ஜெனரல் மெர்ச்செண்ட்ஸ்

35. கீழ ஆவணி மூலவீதி, மதுரை.

பொங்கல் வாழ்த்துக்கள்
மிகச் சிறந்த முறையில் தயாரிப்பாளர்கள்

தந்தி : NARCO வளர்க தமிழ் போன் : 261

நாராயணன் & கோ.

சைக்கிள் டீலர்ஸ்,

த. பெ. எண் : 26
65, கோவிலூர் ரோடு,
காரைக்குடி - 1.

எங்களிடம் தரத்தில் உயர்ந்த எல்லாவித
சைக்கிள்களும், சைக்கிள் சாமான்களும்,
மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.
தேவைக்கு என்றும் எங்கள் சேவை உண்டு.

வாரீர்! வருகை தாரீர்

களுள் தலைசிறந்தவர் நம் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள் ஆவார்கள். கவிமணியவர்கள் நல்ல புலமை வாய்ந்தவர்கள். சங்ககாலப் புலவர்களுக்கு இணை யான இலக்கண இலக்கிய அறிவு படைத்தவர்கள். அவர்களுடைய கவிதைகளை அனைத்தும் எளிமை வாய்ந்தவை. ஆனாலும் பொருட் சிறப்பும் நயமும் மிகுந்தவை கற்றோர்கேயன்றி மற்றோர்க்கும் விளங்கக் கூடியவை, சிறுவர், சிறுமியர்கூட எளிதில் உணர்ந்து, சுவைக்கத்தக்கவை. பாரதியாருடைய கவிதைகள். இறுமாந்த நிலையில் அமைந்தவை. ஆனால் அவரைப் பின்பற்றிப் பாடிய கவிமணியவர்களின் பாடல்களோ ஆற்றொழுக்கான நடையில் இனிமை மிக்கவை கவிமணியவர்களே பாரதியாருடைய பாடல்களைப் பற்றி மிகவும் பாராட்டி ஒரு பட்டிக்காட்டான் கூறுவது போலக் கூறியிருக்கின்றார். பாரதியைப் பற்றி கவிமணி அவர்கள் கூறிய கூற்றுக்கள் அனைத்தும் நம் கவிமணியவர்கள் பாடல்களுக்கும் பொருந்தும். இவருடைய கவிதைகளைக் கேட்டால் உள்ளம் தெளியும். ஊக்கம் பிறக்கும் நகைச் சுவை நன்கு வெளிப்படும். தேனையும் தினை மாவையும் போலவும், தித்திக்கும்முக்கனியைப் போலவும் கானக்குழல் இசையைப் போலவும் கனி வண்டின் ஒலியைப் போலவும் கவிதைகள் அமைந்துள்ளன. செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்காக இனிய எளிய பாடல்களை முதலில் எழுதியவர் நம் கவிமணியவர்களேயாவார்கள்.

கவிமணியின் கவிதைகள்:-

வெண்பா, ஆசிரியப்பா, விருத்தம் முதலிய பாவினங்களில் கவிதை எழுதிய கவிமணியவர்கள் இனிய சந்தங்களிலும் பல பாடல்களை எழுதியுள்ளார். நாளிதழ், வார இதழ், திங்களிதழ்களில் அவ்வப் பொழுது பல்வேறு பொருள் பற்றி பல கவிதைகள் எழுதியுள்ளார்கள். அவற்றையெல்லாம் சேர்த்து "மலரும் மாலையும்" என்ற தலைப்பில் அவர்களே வெளியிட்டுள்ளார்கள். நாட்டிற்கும் மொழிக்கும் தொண்டு செய்யும் நல்ல பல அறிஞர்களையும், தலைவர்களையும், தொண்டர்களையும் பாராட்டிப் புகழ்ந்து பல கவிதைகள் இயற்றியுள்ளார்கள். தொண்டுள்ளமும், அறிவுத்திறனும் எவரிடத்தில் அமைந்திருந்தாலும் அவற்றைப் பாராட்ட கவிமணியவர்கள் என்றும் தயங்கியதேயில்லை ஆங்கிலம், முதலிய வேற்று மொழிகளில் அமைந்த சிறந்த கவிதைகளையும், நூல்களையும் நம் கன்னித் தமிழில் கவிதை உருவமாக ஆக்கியிருக்கின்றார். அவருடைய ஆசிய ஜோதியும் உமர்கையாம் பாடல்களும் உலகம் பாராட்டற்குரியன. காலம் கடந்து நிற்கும் தன்மை வாய்ந்தன. மூலநூல்களைவிட அழகும், சுவையும் மிக்கிருப்பதாக அறிஞர் கூறுவர். பேசும் திறனற்ற உயிரினங்கள்கூட கவிமணியவர்கள் பாடல்களில் பேசும் வகையைக் காணலாம். குதிரையின் புலம்பல் மக்களை விழிப்படையச் செய்வது ஏழை எளியவர்களின் துன்ப வாழ்க்கையை வறுமை வாழ்க்கையைக் கவிமணியவர்கள் சித்தரிக்கும் வகை மிகச் சுவை நிறைந்தது.

முடிப்புரை :-

இத்தகைய சிறந்த கவிதைகளை ஆக்கித் தந்த கவிமணியவர்களின் பெயரால் மன்றம் தொடங்கிய குருவிக்கொண்டான்பட்டி இளைஞர்கள் என்றும் பாராட்டுக்குரியவர்கள். கவிமணி மன்றம் பல்லாண்டு பயனுடைய இலக்கியத் தொண்டாற்றி நின்று நிலவி புகழ் பெற செந்தமிழ் முருகனின் திருவடி போற்றுகின்றேன்.

"கவிமணியின் கவிதை"
சில துளிகள்
தொகுப்பு : மு. தேனப்பன்

1. கலைமகள் வணக்கம்

நாடிப் புலங்கள் உழுவார் கரமும்
நயவுரைகள்
தேடிக்கொழிக்குங் கவிவாணர் நாவும்
செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்
உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம்
அடைக்கலமே.

2. கவிதை

உள்ளத் துள்ளது கவிதை-இன்பம்
உருவெ டுப்பது கவிதை;
தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை.

3. கடமை

தெய்வந் தொழுவோம்; திருந்தத் தமிழ்கற்போம்;
செய்வினையும் நன்ருகச் செய்திடுவோம்-ஐயமின்றி
எவ்வெவ் வறமும் இனிது வளர்ந்திங்குச்
செவ்வையுற வாழ்வோம் தினம்.

4. பெண்ணுரிமை

மங்கைய ராகப் பிறப்பதற்கே-நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும்-அம்மா
பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ இந்த
பாரில், அறங்கள் வளரும்-அம்மா

5. பாரதி

பாட்டுக்கொரு புலவன் பாரதி அடா-அவன்
பாட்டைப் பண்ணேடொருவன் பாடினுன் அடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே அடா-அந்தக்
கிறுக்கில் உளறு மொழி பொறுப்பாய் அடா.

கவிமணியும் நகரத்தாரும்

மு. பழநியப்பன்

திரை கடலோடி திரவியம்தேடி பெருவாழ்வு வாழ்ந்த நகரத்தார் மரபினர் நெடுங்காலம் தொட்டே தங்கள் பொருள் ஈட்டும் பணிகட்கு இடையே ஆலயங்கள் அமைத்தும் அறச்சாலைகள் நிறுவியும் மகிழ்ந்ததோடு, அறிவுச் சாலைகளையும் நிறுவி தமிழ்மொழி அறிவைப் பரப்பித்தனர். பெற்று வந்தனர் மேலும் பாடுவார் முத்தப்பரையும், பண்டிதமணி கதிரேசனையும் பெற்றெடுத்த அச்சமுதாயம் தமிழ் வளர்த்த மற்ற பெரியோரையும் பெருமை படுத்தி வந்துள்ளது.

பாரதியாரையும், டி. கே. சி. யையும் மற்றும் அறிஞர்களையும் கலைஞர்களையும் ஆதரித்த வளர்த்த அச்சமூகம் "கவிமணி அவர்களைப் பாராட்டிய பெருமையையும் பெற்றது.

திரு. டி. கே. சி. அவர்கள் மூலமும் குமரன் சொ முருகப்பா அவர்கள் மூலமும் கவிமணியின் கவிதைச் சிறப்பை அறிந்த நகரத்தார்கள் அவரை பெருமைப் படுத்த அவர்தம் தமிழ்ப்பணியை சிறப்பிக்க அண்ணாமலை அரசர் அவர்கள் தலைமையில் 1943 மே 11 ல் ஆத்தங்குடியில் மாபெரும் பாராட்டுக் கூட்ட மொன்றைக் கூட்டினார். அன்று அரசின் பொன்னாடையை பெறும் பேற்றினைப் பெற்ற கவிமணி அவர்கள் நன்றி கூறுமுகத்தான் "ஒரு யானைக்கு அணிவிக்க வேண்டியதை இந்த ஆட்டுக்குட்டிக்கு அணிவித்துள்ளனர் என அவையடக்கத்தோடு கூறினார்களாம். அதற்கு மறுநாள் செட்டி நாட்டரசவர்கள் தம் இல்லத்தில் கவிமணிக்கு விருந்தளித்துச்சிறப்பித்து ரூபாய் ஆயிரம் பணமுடிப்புத் தந்து பெருமை படுத்தினார்கள்.

தேசிக விநாயகம்பிள்ளை கவிமணியாக சிறப்பிக்கப்பட்ட, கவிமணி என்று பட்டம் சூட்டப்பட்ட பெருவிழாவினை 24-12-1940 ல் சென்னை தமிழ்ச் சங்கத்தில், துவக்கி வைத்தவர் ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்களே என்பது இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

தமிழை வளர்பபவர் எங்கிருப்பினும் அவரை வாழ்த்தும் பண்பாளரான, கவிமணி அவர்கள் நகரத்தார்களை "பாரதத்தாய்க்கு கந்த பல பணிபுரிந்து பசுந்தமிழை பாதுகாத்து சீருயரத் தொழில் பேணி அறம் பேணி, செப்பரிய செல்வம் பேணி என்று பாராட்டியுள்ளதைக் காண்கிறோம்.

"தில்லைப் பதியுடையான்
சிற்றம்பலம் தன்னில்
அல்லும் பகலும் நின்
றாடுகின்றான்-எல்லைக்கண்
அண்ணா மலைமன்
அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து"

என்றும் பாரி பாரியென்று கவி பாடும் புலவர் புகழ்பாட, வாரி வாரி வழங்கிடும் வள்ளல்என்னும் அண்ணாமலை அரசரைப் பாடுகின்றார் கவிமணி.

"வாசகமெல்லாம் மணிவாசகமோ. காசெல்லாம் காணும்

ஆபீஸ் போன் : 22132

வீடு : 30575

Expo 71 ஒயின் ஷாப்

201 மேலமாசி வீதி மதுரை-1

எங்களிடம் எல்லா விதமான

மது வகைகளும் குறைவான

விலைக்குக் கிடைக்கும்

செல்லம் காப்பிஸ்டால்

கீழச்சிவல்பட்டி

அறுசுவை உணவுக்கும்

அருந்தும் காபிக்கும்

சிறந்ததோர் சீரிடம்

செல்லம் காபி ஸ்டால்

அனைவர்க்கும்

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அழகிய அச்சு வேலைகளுக்கு

சிறந்த இடம்

சிவகாமி அச்சகம்

2738, கீழராசவீதி,

புதுக்கோட்டை.

பொற்காசாமோ பேசுலகில் மன்னு முறை யெல்லாம் மகிபால மாநகரான் சொன்னவுரைக் கீடாமோ சொல்" என்பது பண்டிதமணியைபபற்றிய கவிமணியின் பாராட்டுரை.

'பீடுபெற மா வணிகர் குலம் பெற்ற வீர முருகப்பன்" என சொ முருகப்பா அவர்களையும் எல்லா நாடும் தன் நாடாய் எங்கும் சுற்றி ஆராய்ந்து ...செந்தமிழில் பண்பாய் உரைக்கும் என் நண்பன் சோமலக்குமணன் எனசோமலெ அவர்களையும் வாழ்த்தக்காண்கிறோம்!

மலரும் மாலையும் தந்தகவிமணி மலரும் உள்ளம் எனும் குழந்தைகள் நூலைத்தந்த அழ. வள்ளியப்பா அவர்களைப்பாராட்டி "தெள்ளத் தெளிந்த செந்தமிழில் தேனூர் கவிகள் செய்து தரும்வள்ளியப்பா" என கவி பாடியுள்ளார்கள்.

இவ்வாறு நகரத்தார் தம் தமிழ் தொண்டைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தியருளிய அப்பெருங்கவிஞனை அவன் மறைந்த பிறகும் மறவாமல் தமிழகத்திலேயே நாகர்கோவிலுக்கு அடுத்த படியாக மன்றம் அமைத்து மகிழும் குருவிக்கொண்டான்பட்டி நகரத்தார் இளைஞர்களின் பணிசிறக்கத் தமிழ்த்தாய் அருள்வாளாக.

RAMANATHAN AUTO PARTS
Private Limited

Distributors of Auto Parts & Accessories Crompton Batteries, Fenner Fan Belts Horma Bearings.

Regd. Office :

7 North Veli Street, MADURAI-I.

Grams : AUTOTRADE   Phone : 30812

தந்தி : Paper Queen

தொலைபேசி எண்
22273
30052
வீடு : 25704

லெட்சுமி பேப்பர் ஸ்டோர்ஸ்

38. கீழாவணி மூல வீதி
மதுரை-1.

சோல் ஏஜண்ட்ஸ் : சன் பேப்பர் மில்ஸ் லிட்.
டிஸ்ட்ரிபியூட்டர் : மைசூர் பேப்பர் மில்ஸ்,
டால்மியா பேப்பர் மில்ஸ்

திருமண கார்டு, கவர்கள்,
தயாரிப்பாளர்கள்

பண்டிதமணி கதிரேசனர்

மு. சுப. கருப்பையா

பசுந்தமிழைப் பாதுகாத்துச் சீரு யரத் தொழில் பேணி, அறம் பேணி, செப்பரியசெல்வம் பேணி வளர்ந்த நகரத்தார் மரபில் தோன்றிய தமிழுக்குத் தொண் டாற்றிய பெருமையையுடையோ ருள் பண்டிதமணி கதிரேசனர் தலைசிறந்தவர் ஆவார்கள்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என சமதர்ம முழக்கமிட்ட கணி யன் பூங்குன்றனர் பிறந்த பூமியில் தோன்றிய கதிரேசனர் அவர்கள் இளமைப் பருவத்திலேயே சைவத் தையும், தமிழையும் வளர்க்க உறுதியெடுத்து உழைக்கத் துவங் கினர்கள்.

''நெற்றி நிறைந்த நீருடையான்,
''நெஞ்சில் பஞ்சாக் கரமுடை
யான்
முற்றி முதிரும் அன்பாலே
மூவர் தமிழும் பயில் நாவான்
சுற்றம் தழுவும் குணசீலன்
தூய நெறி கண் டொழுகிடு
வான்
கற்ற பெரியோன் கதிரேசன்...

இவ்வாறு நம் கவிமணியவர்கள் கதிரேசனரை படம் பிடித்துக் காட்ட நாம் காண்கின்றோம்,

சைவமும் தமிழும் வளர்க்க எண் ணிய கதிரேசனர் அவர்கள் தன் பிறந்த மண்ணில் வீர விநாயகர் கல்விக் கழகம் என்னும் தொடக் கப் பள்ளியையும், மேலைச்சிவபுரி யில் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையையும், கணேசர் செந்தமிழ்க் கல்லூரியும் துவங்குவதற்கு கார ணமாக இருந்தார்கள்,

(தொடர்ச்சி 71-ம் பக்கம்)

வடமொழியில் புலமை பெற்ற கதிரேசனர் தான் பெற்ற பேறை இவ்வையகம் பெற விரும்பி மிருச் சகடிகம் எனும் வடமொழி நூலை மண்ணியல் சிறுதேர் எனும் உரை யிணையிட்ட பாட்டுடைச் செய்யு ளாக உலகுக்கு மொழிபெயர்த்த தத்தார்கள்.

பல வடமொழி நூல்களைத் தமி ழில் தந்த அவர்களின் பணியில் சிறப்புடைத்தது சாணக்கியரின் கௌடவியத்தை மொழிபெயர்த்த தாகும்.

ஒருசமயம் வீமகவி எனும் போலிப் புலவர் கீழைச்சீவல்பட் டித் தலபுராணம் எனும் பிழை மலிந்த நூலை எழுதி வெளியிட்டு பெரும் பொருள் திரட்டிவந்தார், தமிழுக்கு இழுக்குத் தேடிய அப் பேர்லியின் கொட்டத்தை அடக்க, கீழைச்சீவல்பட்டி தலபுராணப் பிழைகள் என்னும் மறுப்பு நூலை கதிரேசனர் எழுதி வெளியிட்டார் கள். இச்செயல் வாயிலாக அவர் தமிழ்ப் பற்றை நாம் அறியலாம்.

எழுதும் திறனேடு சொல்லாடும் திறனும் பெற்ற கதிரேசனர் அவர் கள் தமிழகமெங்கும் சென்று தன் சொல்வன்மையால் சைவத்தை யும் தமிழையும் வளர்த்தார்கள்.

ஒருமுறை சென்னையில் நடை பெற்ற ஒரு விழாவில் பெண்—பார் வையாளர்கள் பேசிக் கொண்டே இருந்ததைக் கண்ட கதிரேச னர் அவர்கள், ''பெண்மணிகள் தானே! அவை ஒலித்துக் கொண்

"பாமணி நாமம் வாழ்க"

மு. வி. அறிவுக்கதிரோன்

தொகைநூற்கள் ஆழ்ந்து கற்று
தெளிவான பாக்கள் தந்து
மிகைப்பாடு இன்றி எதையும்
மொழிகின்ற ஆற்றல் பெற்று
பகைவர்க்கும் தொண்டு செய்யும்
பக்குவ உளத்தைப் பெற்று
தகைசான்ற வாழ்க்கை வாழ்ந்தோன்
தனிப்புகழ் நிலைத்து வாழ்க!

செல்வங்கள் குவிந்து வாழ்க்கை
செழிப்பாக இருந்த போதும்
கல்வி அறிவில்லா தாரை
கற்றோர் புகழுதல் உண்டா?
நல்லோர் அறிஞன் என்றே
நவில்வார்தான் எவரும் உண்டா?
கல்லாமை நீக்கும் தொழிலை(க்)
கவிமணி செய்தார்; வாழ்க!

பழந்தமிழ்ச் சுவடி தேடி
பதிந்துள்ள கருத்து ஆய்ந்து
அழகு தமிழ்ச்சொல் விளக்கம்
அதற்கெனத் தனியாய் நல்கி
பழந்தமிழ்ச் சுவடிக் கெல்லாம்
புத்துயிர் ஊட்டும் பணியை
பழக்கமாய் கொண்டு வாழ்ந்த
பாமணி நாமம் வாழ்க!

நாளைய அறிஞர் என்று
நாமெலாம் போற்று கின்ற
இளைய சமுதாயத் திற்காய்
இணையற்ற பாடல் தந்து
மலையெனப் புகழைப் பெற்றோன்
மாண்பினை பரப்பும் வண்ணம்
குருவிக் கொண்டான் பட்டி
கொண்டுள மன்றம் வாழ்க!

டேயிருக்கும் என்று கூற அவர் தம் சொல் வன்மை கண்ட மக்கள் மகிழ்ந்தனர்.

நூல்கள் பல எழுதியும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றியும், சைவத்தையும், தமிழையும் வளர்த்த கதிரேசனுரைப் பாராட்டி இன்று நம் பகுதியில் உள்ள மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் ஆரும் ஆண்டு விழாவில் தமிழ்த்தாத்தா உ, வே. சாமிநாத ஐயரவர்கள் பண்டிதருள் மணியைப் போல் திகழும் கதிரேசர் எனப் பாராட்டி பண்டிதமணி எனும் சிறப்புப் பெயரை வழங்கினுர்கள். அத்தமிழ் முனிவரின் வாக்குப் பலித்து பிற்காலத்தில் கதிரேசனுர் அவர்கள் பண்டிதமணி என்றே அழைக்கப்பட்டார்கள், பின்னுல் அவரை நாடி பெரும் பட்டங்கள் வந்திடினும் பண்டிதமணி எனும் பெயரே நிலைத்தது.

கதிரேசனுர் காவியமானுர் காவியம் அவராயிற்று, என தமிழ்ப் பெரியார் திரு. வி. க. கூறியபடி பண்டிதமணி அவர்கள் காவியப் பொழிலாக என்றும் விளங்கினுர்கள். உருகாத நெஞ்சையும் உருக வைக்கும் திருவாசகத்தில் நெஞ்சுருகிய பண்டிதமணி அவர்கள் திருவாசகத்திற்கு உரை எழுதுவதற்காக பல்கலைக் கழகப் பதவியிலிருந்து விலகி தன் இல்லத்தில் இருந்தவாறே முதலில் திருவாசகத்தில் திருச்சதகத்துக்கு உரையெழுதி கதிர்மணி விளக்கம் என்று பெயரிட்டு தமிழுக்குத் தந்தார்கள். தமிழகம் போற்றிக் கொண்டாடி வேண்ட, திருவெம்பாவைக்கும் உரை எழுதினுர்கள். திருவாசகம் முழுவதற்கும் உரை வேண்டி நின்ற தமிழ் மக்களை கலங்க வைத்து கதிரேசனுரைக் கவர்ந்து சென்ற கூற்றுவன் செயலால் அவ்வுரை நூல் முற்றுப் பெருது போயிற்று.

வண்டமிழ் நாட்டுக்கு
வாய்த்த மணிவிளக்கம்
கண்ட கதிரேசன்
கண்டதுபோல் மண்டுபுகழ்
வாதவூர் அண்ணல்
மனங்கண்ட மாதவிரிப்
பூதலத்தில் உண்டோ புகல்?

கவிமணியவர்கள் கதிர்மணி விளக்கத்திற்கு தந்த வாழ்த்துக் கவிதையிது.

இவ்வாறு நகரத்தார் குலத்துதித்த இம்மாமணியை அவர் தம் தொண்டை மறவாது போற்றி, தமிழ்த் தொண்டாற்றி மேலும் பல பண்டிதமணிகளாய் திகழ்வது நம் மரபு இளைஞர்கள் தம் கடமையாகும்,

With best compliments from

Wilfred Pharmacy

Qualified Chemists

25 Mount Road Madras-2

நன்றி

எவ்வளவு பெருமையும் சிறப்பும் பெற்றிருந்தாலும் நன்றியறிதல் இல்லையானுல் மங்கல நாண் இல்லா மங்கையாக மதிக்கப்படுகிறோம். அறவாழி அந்தணன் தூய அறிவு வடிவானவன் என்று போற்றப்படும் இறைவனும் அதையே விரும்புகிருன். அத்தகைய சீரிய பணிக்கு என்னை நான் ஆட்படுத்திக்கொண்டு செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் எனக் கண்டு கவிமணி விழாவில் பங்கு கொண்டு உரை நிகழ்த்தி மணி விழா மலருக்கு வாழ்த்தும் அரிய பெரிய கட்டுரைகளும் எழுதிக்கொடுத்து விளம்பரங்களும் நிறையத்-தந்து சிறப்பு மலரை கண் கவர் கருவூலமாக ஆக்கித்தர உதவிய ஆன்றோர், சான்றோர், அறிஞர், கலைஞர் தொழிலதிபரனைவர்க்கும் மன்றத்தின் செயலாளர் உறுப்பினர் நண்பர்களனைவர்க்கும் அன்புகலந்த நெஞ்சம் நிறைந்த நன்றியறிதலை உரிமையாக்குகிறேன்.

பெரி. சொ. பெரியணன்

தலைவர் மலர்க்குழு.

வளர்க கவிதை! ஓங்குக கவிமணி புகழ் !!

கவிமணி மன்றம்

குருவிக்கொண்டான்பட்டி
திருச்சி மாவட்டம்.

பதினுன்காம் ஆண்டு கவிமணிவிழா அழைப்பு

பேரன்புடையீர்!

எங்கள் மன்றத்தின் பதினுன்காம் ஆண்டு கவிமணி விழா வள்ளுவராண்டு 2003, சித்திரை ஐந்து, ஆறு நாட்களில் (17,18—4—1972) நடைபெற இருக்கின்றது. முதல் நாளன்று (17—4—1972)

திரு. லெ, கிருஷ்ணன் அவர்கள் விழாவினைத் துவக்கிவைக்கவும்.
(சேர்மன் பேங்க் ஆப் மதுரை)

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் சிறப்பு மலரை வெளியிடவும்,
(ஆசிரியர், கலைமகள், சென்னை)

திரு. லால்குடி புலவர் கீரன் அவர்களும்,

திரு, திருக்குறளார் வி. முனுசாமி பி. ஏ., பி. எல். அவர்களும்,

திரு. பேராசிரியர் நா. பாலுசாமி எம். ஏ., எம். லிட். அவர்களும்,

வழக்காடு மன்றத்தில் பங்கேற்கவும் இசைந்துள்ளார்கள்.

இரண்டாம் நாள் 18—4—72 இரவு

இசை அரசு சீர்காழி எஸ். கோவிந்தராசன் அவர்களின்
இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

இக் கவிமணி திருநாளில் பங்கேற்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இன்னனம்
கவிமணி மன்றத்தார்.
குருவிக்கொண்டான்பட்டி.

வெ. ச. திருப்பதி என்ற இராமசாமி (செயலர்)
மு. தேனப்பன் (இணைச் செயலர்)

விழா நிகழ்ச்சிகளை திருச்சி வானொலி நிலயம் ஒலிபரப்புகிறது

விழா அரங்கில்

முதல் நாள் :— 17—4—72 திங்கட்கிழமை

மாலை 4-30 மணி :—நாதசுர இசை திரு, முத்துவேல் குழுவினர்.

மாலை 6-00 மணி :—இறை வணக்கம், வரவேற்புரை அறிக்கை வாசித்தல், பரிசு வழங்குதல்

துவக்கவுரை:— திரு. லெ கிருஷ்ணன் அவர்கள்
(Chairman. Bank of Madura)

சிறப்பு மலரை வெளியிட்டு சிறப்புரை ஆற்றுதல் :—
திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பொருள்;—"தேவி"

வழக்காடு மன்றம்:

நடுவர்:—திருக்குறளார் வி, முனுசாமி, பி. ஏ., பி. எல். அவர்கள்

வழக்கு:—வாலியை இராமன் மறைந்திருந்து கொன்றது நீதியே ! அநீதியே!

வாதிடுவோர்:—நீதியே!: திரு. நா. பாலுசாமி எம்.ஏ,எம். லிட்.அவர்கள்
அநீதியே! : திரு. புலவர் கீரன் அவர்கள்

நடுவர் தீர்ப்பு:

நன்றி நவிலல்;

இரண்டாம் நாள் :—

18—4—72 செவ்வாய்கிழமை
இரவு 9—00 மணி:—

இசை அரசு
சீர்காழி S. கோவிந்தராசன்
குழுவினர் இன்னிசை.



FREE! FREE!

The Canara Banking Corporation Ltd.

Estd. 1906

Offers Life Insurance Cover for you.

Just open an Insurance-linkedSavings Account with us, and see to it that you maintain a minimum balance Rs. 1000/- in cities and towns and Rs. 500/- in rural areas.

You don't pay any premium.

No medical Examination.

You get all the privileges of a savings account holder–cheque facility, acceptance of standing instructions etc. Your interest is intact. You get the life cover free which is an additional benefit.

If you are in the age group 18–40, your life is covered to the extent of double the average balance in your account for the previous half year subject to a maximum of Rs. 10,000. The cover for persons in the age group 41–49 will be subject to a maximum of Rs. 5,000.

For details contact your nearest branch.

—Where friendliness is a tradition.

The Canara Banking Corporation Ltd.

Regd. Office:
UDIPI.

Administrative Office:
MANGALORE-1.

M. R. KAMATH
Chairman

தொலைபேசி எண்:
36142

வீட்டு உபயோகத்திற்கும்
ஓட்டல்களுக்கும்
கேன்டீன்களுக்கும்
தேவையான உயர்தர
எவர்சில்வர்
அலுமினிய
பாத்திரங்களுக்கு

சிறந்த இடம்:

முருகன் ஸ்டோர்ஸ்

41, நைனியப்ப நாய்க்கன் தெருவு,
(ஸ்ரீ கந்தசாமி கோயில் அருகாமை)
பார்க் டவுன், : : சென்னை-3.

Printed at Rase Printers, Nungambakkam, Madras-34. Phone: 810313